Registered as a News Paper in Sri Lanka
பக்கங்க... விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ வைகாசி மீ 9 ஆம் உ புதன்கிழமை (23 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 27 ஓசை 94

## புலிகளுடன் மோதுவதால் அமைதி ஏற்படாது

### முஸ்லிம் காங்கிரஸ் எம். பி.

( பட்டிருப்பு )

வடக்கிலும், கிழக்கிலும் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியை அங்குள்ள சகல கட்சிகளும் ஏற்புடைய வகையில் உடனடியாகத் தீர்த்து வைக்கும் படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஐ. ஏ. எம். ஹிஸ்புல்லா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரும் மோது

(6 ஆம் பக்கம் பார்க்க்)

# அரசின்போக்கால்ஆபத்தானவிளைவுகள்

# அமைச்சர் ஹமீத்திடம் புலிகள் எச்சரிக்கை

## மாகாணசபை கலைப்பு: 6வது திருத்த நீக்கம்: உடன் நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடாத்த அரசாங்கம் தாமதிப்பதால் தமிழீழத்தில் அரசியல் வெறுமை நீடிப்பதாகவும், இந்நிலை நீடித்தால் ஆபத்தான விளைவுகள் ஏற்படலாமென்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசை எச்சரித்துள்ளது விடுதலைப்புலிகள் சனநாயக அரசியல் நீரோட்டத்தில் இறங்குவதானால் ஆறாவது சட்டத் திருத்தம் நீக்கப்பட வேண்டுமென்றும் இதில் காலம் தாழ்த்தாது அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் புலிகள் இயக்கம் அரசிடம் வலியுறுத்தி உள்ளது. இன்றுகாலை யாழ்ப்பாணத்தில் நீதி அமைச்சர் ஹமீத்திற்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சின் போதே புலிகள் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா, செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்ட தளபதி பானு, மகளிர் முன்னணித் தலைவி ஜெயா, திருமதி பாலசிங்கம் ஆகியோர் புலிகள் தரப்பில் இப்பேச்சுக்களில் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய இப் பேச்சுக்கள் பிற்பகல் 3மணிவரை நடைபெற்றது.

### அரசின் செயலால் சந்தேகம்

சமீபகாலமாக அரசாங்கத்தின் போக்காலும், நடவடிக்கைகளாலும் தமிழீழ மக்கள் மத்தியில் சந்தேகமும் அச்சமும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டுமென வலியுறுத்தினர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுக்களுக்கு தமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் தெரிவித்த புலிகள் இப்பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டால் புலிகள்-அரசு உறவு வெகுவாகப் பாதிக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அமைச்சர் ஹமீத் வெளியேறியபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா, திருமதி பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா, அமைச்சர் ஹமீத், செயலாளர் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## வடக்கு-கிழக்கு தொலைத் தொடர்பு சர்வதேச தரத்திற்கு உயரும்

(யாழ்ப்பாணம்)

தொலைத்தொடர்பு பொறி ... ளப்படவுள்ளது. மேற்படி

பட்டதாரிகளுக்கு

புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சின் போதே புலிகள் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு, கோபாலசாமி மகேந்திரராசா, செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்ட தளபதி பானு, மகளிர் முன்னணித் தலைவி ஜெயா, திருமதி பாலசிங்கம் ஆகியோர் புலிகள் தரப்பில் இப்பேச்சுக்களில் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய இப் பேச்சுக்கள் பிற்பகல் 3மணிவரை நடைபெற்றது.

கள் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டுமென வலியுறுத்தினர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுக்களுக்கு தமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் தெரிவித்த புலிகள் இப்பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டால் புலிகள்-அரசு உறவு வெகுவாகப் பாதிக்கப்படுமெனவும் சுட்டிக் காட்டினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அமைச்சர் ஹமீத் வெளியேறியபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா, திருமதி பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா, அமைச்சர் ஹமீத், செயலாளர் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# வடக்கு-கிழக்கு தொலைத் தொடர்பு சர்வதேச தரத்திற்கு உயரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கின் தொலைபேசித் தொடர்புகள் வெளிநாட்டு உதவியுடன் சர்வதேச தரத்துக்கு விரைவில் உயர்த்தப்படும்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு தொலைத்தொடர்பு பொறியியல் அதிகாரி திரு. கனகசூரியர் தெரிவித்தார். வடக்கு, கிழக்கு பாரிய தொலைபேசித்திட்டம் ஒன்று டென்மார்க், சுவீடன் அரச உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்படி திட்டம் தொடர்பாக நேரில் பார்வையிடுவதற்காக ''காப்பரோ'' குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

இக்குழுவினர் முதலில் யாழ்ப்பாணத்தில் இத்திட்டம் பற்றி நேரடியாக ஆராய்ந்துவிட்டு திருமலைக்கு சென்றுள்ளனர். இது நிறைவேற்றப்படும் பட்சத்தில் உள்ளூர் தொலைத்தொடர்புகள் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கிலிருந்து சர்வதேசத் தொடர்புகளையும் இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். (மு)

# யாழ்ப்பாணத்தில் படித்துவிட்டு திரும்புவோருக்கு எதிர்ப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் வாழும் சில மாணவர்கள் யாழ் நகரில் சென்று க. பொ. த. உயர் வகுப்பில் படித்து விட்டு மீண்டும் திருக்கோணமலைக்கு வந்து பரீட்சை எழுத விண்ணப்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையினால் இம் மாவட்டத்தில் தொடர்ந்து கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் பாதிப்பினை அடையும் நிலை உருவாகியுள்ளன.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இம்மாவட்டத்தில்கல்விபயிலும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் மாவட்ட கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

# ஆங்கில சுருக்கெழுத்தியலுக்கு தொழிற் பயிலுநர் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழிற்சபையினால் ஆங்கில சுருக்கெழுத்தியலுக்கு கைவினைதொழிற் பயிலுநர்களை புதிதாகச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன ஒரு வருடகாலத்திற்கான இப் பயிற்சி நெறியில் முதல்பாகம் கட்டுநாயக்கா பயிற்சி நிலையத்தில் ஏழு மாதப் பயிற்சியாகவும் இரண்டாம் பாகமானது தே.தொ. ச.யினால் ஒழுங்கு செய்யப்பட்ட அலுவலகமொன்றிலான ஐந்து மாதத்துக்குரிய வேலை செய் பயிற்சியாகவும் அமைந்திருக்கும்.

கல்வித்தகைமையாக மொழி, கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கி இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன் க. பொ. த (சா/த) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும் அத்துடன் 1990 யூன்.01ஆம் திகதியன்று 16 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தின்போது மாதாந்த படியாக 450 ரூபாவும் இ. போ. ச. பருவகாலச் சீட்டும் வழங்கப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகளுக்கு பயிற்சியும் நியமனமும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் கடந்த மாசி, பங்குனி மாதங்களில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற பட்டதாரிகளிற்கு விரைவில் முகாமைத்துவப் பயிற்சியும் அதன் பின் அரச நியமனங்களும் வழங்கப்படவுள்ளன

இதுவரை முகாமைத்துவப் பயிற்சியை மேற்கொள்ளாத 125 பட்டதாரிகளிற்கே இது பொருந்தும். இதனைத் தொடர்ந்து இவர்கள் அரச திணைக்களத்தின் அதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தவறியவர்களுக்கு புனர்வாழ்வு

வாகரை நடமாடும் செயலகம், வடமுனை, ஊற்றுச்சேனை நேரடி விநியோகம் ஆகியவற்றில் புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவுகள் பெற தவறியவர்களுக்கான கொடுப்பனவுகள் புனாணையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு. செல்வின் ஐரனியேஸ் கூறினார்,

# அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் கடமையாற்றும் அரசியல் அதிகாரி திரு. பால் மயற் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். நகரில் நாவலர் மண்டபத்தில் இன்று மாலைஆரம்பிக்கப்படவிருக்கும் அமெரிக்க புத்தகக்கண்காட்சியிலும்பால் மயற் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்றும், முக்கியஸ்தர்களைச் சந்தித்தும் யாழ்ப்பாண அரசியல் இன்றையநிலைபற்றியும் எதிர்கால அரசியல் நடைகள் எவ்வாறு அமையும் என்பதனை அறிவதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

# சான்றிதழ் தாமதத்தால் வாக்காளர் இடாப்பில் இல்லை.

(தெரணியகல)

இந்திய வம்சாவளியினரை பதிவு செய்யும் திணைக்களம் பிரஜாவுரிமை சான்றிதழ் வழங்குவதில் ஏற்படுத்திவரும் காலதாமதத்தால் இலங்கை பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் உட்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

1988ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தின் நான்காம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன; ஆனால் இதுவரை இவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவில்லை.

(6ஆம்பக்கம் பார்க்க)

# இங்கிலாந்து ஸ்தானிகர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்து உயர் ஸ்தானிகர் டேவிற்கிளாட்ஸ்ரோன் எதிர் வரும் வியாழனன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். அன்று மாலை யவ்னா இங்லிஷ் அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். மேற்படி வைபவம் பரி. யோவான் கல்லூரியில் மாலை 4 மணியளவில் நடைபெறும்.

# எல்லைப்புற முஸ்லிம் கிராமம் புலிகளுக்கு வரவேற்பு

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக, அநுராதபுரம் மாவட்டத்துக்கு அண்மையில் யாழ் - திருமலை வீதியில் அமைந்திருக்கும் றொட்டவேவா என்ற கிராமம் தனி முஸ்லிம்களைக் கொண்ட கிராமம்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச்சேர்ந்த செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி, திருமலை மாவட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தினக்கல் கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

தாய்லாந்தில் இருந்து எயர் லங்கா விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய 26 வயதுடைய இலங்கை இளைஞர் ஒருவர் 350,000 ரூபா பெறுமதியான இரத்தினக்கற்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில்

# உல்லாசப் பயணத்துறையை புனரமைக்க நடவடிக்கை

(திருக்கோணமலை)

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறைக்கு மீண்டும் புத்துயிரளிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட உல்லாச பயண ஹோட்டல்களை மீண்டும் புனரமைப்பதற்கான கடன் உதவிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய தபால் நிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு புதிய உபதபால் நிலையங்கள் திறப்பதற்கான நடவடிக்கைகளை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

கல்லடி முகத்துவாரம், பிறைந்துறைசேனை ஆகிய இடங்களில் இரு உப தபால் நிலையங்கள் அமைகின்றன.

ஆரையம்பதி உப தபால் நிலையம் அஞ்சல் நிலையமாக தரமுயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (37)

## கல்முனைக்குடியில்

# மக்கள் முன்னணி பிரமுகர் ஆதம்பாவா சுட்டுக்கொலை

## சுட்டவர்கள் ஜிகாத் இயக்கமா?

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனைக்குடி, சாய்ந்தமருது பகுதிகளின் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் யு. எல். எம். ஆதம்பாவா நேற்று முன்தினம் இரவு கல்முனைக்குடியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது சடலம் நேற்றுக்காலை கல்முனைக் கடற்கரைப் பள்ளிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது.

ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் ஆயுதம் தாங்கிய கொலைஞர்களால் ஆதம்பாவா சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜனாப். ஆதம்பாவாவின் இறுதிச்சடங்குகள் நேற்றுக் கல்முனைனக்குடியில் நடைபெற்றன. இதில் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் கரிகாலன், திரு. ராம், திரு. காஸ்ட்ரோ, திரு. சிவா மற்றும் பெருந் தொகையான தமிழ், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர். கல்முனைக்குடி, கல்முனைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தொடர்பு கொள்ளவும்

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வந்த மெயில் புகையிரதத்தில் ட்றவலிங் பாக்கை (Travelling Bag) ஒப்படைத்தவர் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

சிவலோகநாதன்
''திருரத்தின வாசம்'
வதிரி, அல்வாய்.
(R.500)

### தவறிவிட்டது

சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு. கு. லோகநாதன் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. அடையாள அட்டை இல. 620400777 V இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதக் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் மே / பா ஈழநாதம், 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
(B/1006)


## அதிபர் தங்கு விடுதி

(முல்லைத்தீவு)

செம்மலைமகாவித்தியாலய அதிபர் தங்குவிடுதி ஒன்று புதிதாகக் கட்டுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் விரைவு படுத்தப் பட்டுள்ளது.

குறைந்தது நான்கு மாதங்களுக்குள் இந்தக் கட்டிட வேலைகள் முடிவடையவேண்டும் என கல்வித் திணைக்களத்தால் பணிக்கப் பட்டுள்ளதாக ஒப்பந்தக்காரர் கூறிக் கொள்கிறார்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் இந்தக் கட்டிட வேலை நடைபெற்று வருகிறது (58)

## ஆஸ்பத்திரியில் சிரமதானம்

(வந்தாறுமூலை)

வாழைச்சேனை அரசினர் வைத்தியசாலை கடந்த பல வருடங்களாக சுற்றாடல் பாதிப்புற்ற நிலையில் இருந்து வந்தது. இவற்றை புனரமைக்கும் நோக்கத்துடன் விடுதலைப்புலிகள் சிரமதான பணியினை மேற்கொண்டனர்.

சுற்றாடல் சுத்தம், குடிநீர் விநியோகம், போன்றவை நடந்து முடிந்த சேவைகளாகும். தற்பொழுது நோயாளர்களை நேரடியாக கண்காணித்தல், வைத்தியசாலை ஊழியர்களின் சேவைகளை நேரடியாக பார்வையிடுவதுபோன்ற பணிகளை விடுதலைப்புலிகள்

## நிர்வாக சபை தெரிவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வகுப்புத்தொழிலாளர் சங்கத்தின் புதியநிர்வாக சபைத் தெரிவுக்கூட்டம் இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணியளவில் மேற்படி சங்க பணிமனையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். பிரதேசப் பொறுப்பபாளர் பொன்மாஸ்டர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வர்த்தக ஊழியர் சங்கப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு தலைவர் கி. அருமைத்துரை உப தலைவர் மா. செல்வநாயகம், செயலாளர் கோபாலகிருஷ்ணன், உப செயலாளர் சி. மகாலிங்கம் பொருளாளர் கொ. கேதீஸ்வரன், நிர்வாக சபை உறுப்பினர்கள் பொ. ஆறுமுகம், நா. இராஜதுரை, பாலசுபபிரமணியம், சி. ராஜலிங்கம், செ செல்வநாயகம் தா. ராஜேந்திரம், நடைமுறை உத்தியோகஸ்தர் கு. கோபாலகிருஷ்ணன். (மு)

## கவனிப்பாரற்ற தபாற் பெட்டி

கல்லடியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய விடுதிமாணவர்களினதும், இப்பகுதி பொது மக்களினதும் நலன் கருதி நிறுவப்பட்ட தபாற் பெட்டி திறந்த நிலையில் பல மாதங்களாக கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

இத்தபாற் பெட்டியை மறுசீரமைத்து விடுதி மாணவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கவேண்டியது அவசியமாகும். (55)

## ஆண்டு நிறைவு விழா

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி சைவமகாசபையில் முப்பத்தெட்டாவது ஆண்டு நிறைவுவிழா களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயத்தில் சைவமாமணி பண்டிதர் சி. விஸ்வலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

சைவமகாசபையால் நடாத்தப்பட்ட பரிசு பெற்ற பண்ணிசை, பேச்சு என்பனவும், கிராம அபிவிருத்தி ஆராய்ச்சிஉத்தியோகத்தர் திரு தங்கவேலாயுதத்தின் விசேட சொற்பொழிவும, திரு. அரசரெத்தினத்தின் சிறப்புச் சொற்பொழிவும் இந் நிகழ்ச்சியில் முக்கிய பங்கு வகித்தன.

பேச்சு, பண்ணிசை என்பனவற்றில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 5,000ரூபா செலவில் கிணறு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு தென்மராட்சி நோயாளர் நலன்புரிச்சங்கம் சுமார் ஐயாயிரம் ரூபா செலவில் புதியதொரு குழாய்க் கிணற்றை அமைத்துள்ளது.

47 அடி ஆழமுள்ள இக் குழாய்க் கிணறு அவர்கள் எதிர்பார்த்தபடி நல்ல தண்ணீராக அமைந்துள்ளது.

இந்தக் குழாய்க்கிணறு சாவகச்சேரி ஆஸ்பத்திரித் தேவைகளையும், நோயாளர் குடிதண்ணீர்த் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளதாக நோயாளர் நலன் புரிச்சங்கம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. (35)

## வீதியின் அவல நிலை

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் விபுலானந்தர் வீதி, மணியம்தோட்ட வீதி என்பன இன்னமும் புனரமைப்பு செய்யாத நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. (43)

## மன்னார் மாவட்டத்தில் கிராமப் புறங்களில் நூல்நிலையங்கள் அமையும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கிராமப்புற மக்களிடையே பத்திரிகைகள் வாசிக்கின்ற பழக்கம் வுகம் குறைவாகக் காணப்படுவதைக் கண்டறிந்த பலர் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் இக் குறைபாட்டினை நிவிர்த்தி செய்யும் நோக்குடன் கிராமங்கள் தோறும் நூல் நிலையம் அமைக்கும் பணியில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றது.

இதற்கான முன்னோடி நடவடிக்கையாக மன்னார் மாவட்டப் பிரதேசக் காரியாலயத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளில் பத்துக் கிராமங்களைத் தெரிவு செய்யபபட்டு கிராம மக்களின் ஒத்துழைப்புடன் தற்காலிக ஓலைக் கொட்டில்களை அமைக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப் படுகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் பிரதேசப் பொறுப்பாளர் கவனித்து வருகின்றார்.

இந் நூல் நிலையங்கள் யாவும் இம் மாதம் 20 ஆம் திகதி மறைந்த தளபதி லெப்டினன் கேர்ணல் ராதாவின் மூன்றாம்ஆண்டுநினைவு நாள் அன்று முதல் செயற்பட ஏற்பாடாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சுரேஷ் தெரிவித்தார்.

## ஆலய உற்சவம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு அருள் மிகு வதிரிபீட மண்றுாகும் பெருமான் ஸ்ரீவிநாயகமூர்த்திப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 30 திகதி மு. ப. 11 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள் திருவிழா நடைபெறும்.

6ம் திகதிதேர்த் திருவிழாவும் 7ம் திகதி தீர்த்தோற்சவமும் 8ம்திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்,

## பருத்தித்துறையில் சாய்ப்புச் சட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைவர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டிருக்க வேண்டுமென சகல வர்த்தகர்களுக்கும் பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. இச் சாய்ப்புச்சட்ட அமுலை மீறக் கூடாது என்றும் வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேனீர்கடைகள், பத்திரிகை விற்பனை நிலையங்கள், மருந்து விற்பனை நிலையங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், வீடியோ கடைகள் என்பன இச்சாய்ப்புச்சட்டத்திற்குள் அடங்காதபடியினால் ஞாயிற்றுக்கிழமைகளிலும்இந் நிலையங்கள்திறக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேநீர்க் கடைகளில் தேநீர் உணவுப் பண்டங்கள் தவிர்ந்த வேறு பொருட்கள் விற்பனையும் பருத்தித்துறை சந்தைக்குள் உள்ள சிறு கடைகளில் பலசரக்குப் பொருட்கள் விற்பனையும் தடைசெய்யப் பட்டுள்ளன.

வர்த்தகர் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டும் இந் நடைமுறைகளை நடைமுறைப் படுத்த தவறி அதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (25)

## "எக்ஸ்போ 90"

(டோக்கியோ)

தற்பொழுது எக்ஸ்போ 90 பொருட்காட்சி யப்பான் நாட்டின் ஓசாக்கா நகரில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதலாந்திகதி ஆரம்பமாகிய இப் பொருட்காட்சி செப்டம்பர் மாதம் வரை) நடைபெறவுள்ளது. (52


### மனோகரா - (யாழ்)

தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
CLINT EA TWOOD IN HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

### வெலிங்டன் (யாழ்)

ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

### ஹரன் - (யாழ்)

தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

### வின்ஸர் - யாழ்

தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

### ராஜா (யாழ்)

தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
இன்று
Terence Hill Bud Spencer
I AM FOR THE HIPPOPOTAMUS

### நியூ சாந்தி (யாழ்)

தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)

### லிடோ (யாழ்)

தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை
நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ்,
மனோரமா, ஜெய்சங்கர்,
வை. ஜி. மகேந்திரன்
நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

### ஸ்ரீதர் - (யாழ்.)

தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/699


# சாவகச்சேரி ஆஸ்பத்திரி சிறுவர் தனிவார்ட்டிற்கு உதவுக

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிறுவர் பராமரிப்புக்கான தனி வார்ட் ஒன்றை அமைத்து அதை தனிப்பிரிவாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை தந்து உதவ வேண்டுமென்று, தென்மராட்சி நோயாளர்நலன் புரிசங்கமும், சாவகச்சேரி ஆஸ்

சைக்கெனத்தனிப்பிரிவு ஒன்று இல்லை. பெண்கள் வார்ட்டிற்கு பக்கமாக ஒரு வார்ட்டில் நோயுற்ற குழந்தைகளையும்பிரசவம்முடிந்த ஒரு வாரத்திற்குட்பட்ட குழந்தைகளையும் ஒரே இடத்திலேயே வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இது குழந்தைகள் சிகிச்சைக்கு ஏற்றதாக இந்த ஆஸ்பத்திரி

ஆஸ்பத்திரிகளுக்கும் விஜயம் செய்து ஆஸ்பத்திரிகளின் உபகரணத் தேவைகள் சம்பந்தமான பட்டியல் ஒன்று தயாரித்துச் சென்றுள்ளது. அப்பட்டியலின் அடிப்படையில் வட பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு உபகரணங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி உபகரணங்கள்

# சிறுவயதிலேயே ஒழுக்கம் போதிக்கப்பட வேண்டும்

(கிளிநொச்சி

பாடசாலை மாணவர்களுக்கு சிறுவயதிலேயே உண்மை, நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றைப் போதிக்க வேண்டும். அவ்வாறான மாணவர்களினால் தான் எமது மக்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும்.

கனகாம்பிகைக் குளம் கனிஷ்ட வித்தியாலய மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து

நொச்சிக் கல்வி அதிகாரி திரு பொன். சபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு செ. நடராசா தலைமையில் நடை பெற்ற இப் போட்டியில் வணக்கத்துக்குரிய சுமணதாரதேரோ, கிளிநொச்சிக் கொத்தணி அதிபர் திரு. என். சோதிநாதன், உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பத்மநாதன் ஆகியோர் குத்து விளக்கை ஏற்றி பரிசளிப்பு வைபவத்தை ஆரம்

வாழைச்சேனை அரசினர் வைத்தியசாலை கடந்த பல ருடங்களாக சுற்றாடல் ாதிப்புற்ற நிலையில் இருந்து ந்தது. இவற்றை புனரமைக் ம் நோக்கத்துடன் விடுத லப்புலிகள் சிரமதான பணி னை மேற்கொண்டனர்.

சுற்றாடல் சுத்தம், குடிநீர் நியோகம், போன்றவை ந்து முடிந்த சேவைகளா ம். தற்பொழுது நோயாளர் ளை நேரடியாக கண்காணித் ல், வைத்தியசாலை ஊழி ர்களின் சேவைகளை நேரடி ாக பார்வையிடுவதுபோன்ற ணிகளை விடுதலைப்புலிகள் றுப்பினர்கள் மேற்கொண்டு ருகின்றனர்.

இதனால் வாழைச்சேனை வைத்தியசாலையின் சேவை ள் நல்லமுறையில் உள்ளது. (29)

## நெடுந்தீவில் துக்க தினம்

(நெடுந்தீவு)

குமுதினிப் படகுப் படுகொ லகளின் நினைவாக மே ாதம்15ஆம் திகதியை நெடுந் வு மக்கள் துக்க தினமாக னுஷ்டித்தனர்.

கோவில்களில் விசேட பூசை ள் நிகழ்த்தப் பட்டன. இறந் வர்களின் உறவினர்களும், பாதுமக்களும் குமு னிப்படகுப் படுகொலையில் றந்தோரின் ஞாபகமாகக் ட்டப்பட்ட தூபிக்கு மலர் ஞ்சலி செலுத்தினார்கள்.

அஞ்சலி உரைகளும் நிகழ்த் ப்பட்டன நெடுந்தீவிலிருந்து ாக்குவரத்துக்களும் நடை பறவில்லை. மிகவும் அமை யான நிகழ்ச்சிகளுடன் இத் னம் அனுஷ்டிக்கப்பட்டது

நெடுந்தீவு மரநாட்டு இயக் ம், பல.நோக்குக் கூட்டுறவுச் ங்கம், சனசமூக நிலையங்க ன் சமாசம் ஆகியன இந் கழ்ச்சிகளை ஏற்பாடு செய் ருந்தன (62)

## வருடாந்தக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

இலங்கை தமிழர் ஆசிரியர் ங்கத்தின் யாழ் மாவட்டக் ளையின் வருடாந்தக் கூட் ம் யாழ்ப்பாணம் பாரதி ாஷா வித்தியாசாலைமண்ட த்தில் நடைபெறவுள்ளது.

27-05-90 காலை9-30மணிக் த் தொடங்கும் வருடாந்தக் ட்டத்தில் நடப்பு வருடத் ற்கான புதிய உத்தியோகத் ர் தெரிவும் நடைபெறவுள் து.

இதற்கான ஒழுங்குகளைப் தில் செயலாளர் திரு. க.தற் ரானந்தம் மேற்கொண்டுள் ார். (12)

யத்தில் சைவமாமணி பண்டிதர் சி.விஸ்வலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

சைவமகாசபையால் நடாத்தப்பட்ட பரிசு பெற்ற பண்ணிசை, பேச்சு என்பனவும், கிராம அபிவிருத்தி ஆராய்ச்சிஉத்தியோகத்தர் திரு தங்கவேலாயுதத்தின் விசேட சொற்பொழிவும், திரு. அரசரெத்தினத்தின் சிறப்புச் சொற்பொழிவும் இந் நிகழ்ச்சியில் முக்கிய பங்கு வகித்தன.

பேச்சு, பண்ணிசை என்பனவற்றில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (45)

## கொடி தினம்

(வேலணை)

யாழ் - மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் கொடி தினம் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

யாழ்-மாவட்ட இந்துஇளைஞர் பேரவையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கொடி தினத்திற்கான முதல் கொடியை யாழ்-மாநகராட்சி மன்றத்தின் ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் பேரவையின் செயலாளர் திரு.இ தவகோபாலிடம் இருந்துபெற்றுக்கொண்டு கொடி தினத்தை ஆரம்பித்துவைத்தார்.

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி சிறுவர் தனிவார்ட்டிற்கு உதவுக

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிறுவர் பராமரிப்புக்கான தனி வார்ட் ஒன்றை அமைத்து அதை தனிப்பிரிவாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை தந்து உதவ வேண்டுமென்று, தென்மராட்சி நோயாளர்நலன் புரி சங்கமும், சாவகச்சேரி ஆஸ்பத்திரி மருத்துவ அதிகாரிகளும், யூ.கே சிறுவர் பராமரிப்பு நிதியத்தாரிடம் ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பிறநாட்டு சிறுவர் பராமரிப்பு நிதியங்களில் ஒன்றான யூ.கே. சிறுவர் பராமரிப்பு நிதியத்தின இலங்கைப் பிரதிநிதி செல்வி மரியன் பேர்க், யாழ்ப்பாணம் பிரதேசப்பிரதிநிதியான திருமதி கைலாசபதியும் அண்மையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்தனர். இவர்களைதென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கப் பிரதிநிதிகளும் சாவகச்சேரி வைத்தியசாலை அதிகாரிகளும் சந்தித்து உரையாடினர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் குழந்தைகள் சிகிச்சைக்கெனத்தனிப்பிரிவு ஒன்று இல்லை. பெண்கள் வார்ட்டிற்கு பக்கமாக ஒரு வார்ட்டில் நோயுற்ற குழந்தைகளையும்பிரசவம்முடிந்த ஒருவாரத்திற்குட்பட்ட குழந்தைகளையும் ஒரே இடத்திலேயே வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இது குழந்தைகள் சிகிச்சைக்கு ஏற்றதாக இந்த ஆஸ்பத்திரி மருத்துவ அதிகாரிகள் கருதவில்லை..

இந்த மருத்துவ அதிகாரிகளினதும் நோயாளர் நலன்புரி சங்கத்தினதும் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டே வெளிநாட்டு சிறுவர் பராமரிப்பு நிதியம் கீழ்க் கண்டவாறு அவர்களுக்கு பதிலளித்துள்ளது.

அவர்கள் கூறியதாவது: ஓ.டீ.ஏ என்றொரு வெளிநாட்டு நிறுவனம் சில மாதங்களுக்கு முன்பு வடபகுதியிலுள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் விஜயம் செய்து ஆஸ்பத்திரிகளின் உபகரணத் தேவைகள் சம்பந்தமான பட்டியல் ஒன்று தயாரித்துச் சென்றுள்ளது. அப்பட்டியலின் அடிப்படையில் வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு உபகரணங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி உபகரணங்கள் இப்பொழுது இலங்கைக்கு வந்து கொண்டிருக்கின்றன அவை வந்துசேர்ந்ததும் அவற்றைப்பார்வையிட்டு அவர்கள் அனுப்பத்தவறிய உபகரணங்களைத்தந்து உதவுவதாகவும் உறுதியளித்துள்ளனர். (35)

## சனசமூக நிலையங்களில் விளையாட்டுப் போட்டி

(சுண்டுக்குளி)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் முன் வந்துள்ளது.

தடக்களப் போட்டிகளுடன் ஆண்களுக்கான 15 மைல் மரதன் ஓட்டமும், ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்களுக்கான 10 மைல் சைக்கிள், ஓட்டம் ஆகிய போட்டிகள் நடாத்தப் பெறவுள்ளன.

போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி ஆகும். (61)

## கிராம சேவகர் சிபார்சு உதவிப் பணம் இல்லை

(கோண்டாவில்)

கிராமசேவகரால் சிபார்சு செய்யப்பட்டும் தகுதியுடைய முப்பதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் உதவிப் பணம் பெறமுடியாத நிலையிலுள்ளார்கள்.

சமூக சேவைப் பகுதியில் நிதி இல்லாமையே இந்த உதவியைப் பெறமுடியாமைக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

மாகாண அமைச்சு அரச அதிபருக் கூடாக போதிய அளவு நிதியை அனுப்பி வைக்கும் பட்சத்திலேயே தம்மால் வயோதிபர்களுக்கான இந்த உதவிப் பணத்தை வழங்க முடியும் என்று சமூக சேவைகள் பகுதியினர் தம்மிடம் தெரிவித்துள்ளதாக கோண்டாவில் கிழக்கு கிராம சேவகர் திரு. ப சந்திரசேகரம் கூறினார். (34)

## 'வித்துக்கள்' நூல் அறிமுக விழா

கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட வித்துக்கள்என்ற தென்மோடி நாட்டுக் கூத்து நூல் அறிமுக விழா நாளை வியாழக்கிழமை காலை8மணியளவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சுண்டுக்குளிஉயாதரவகுப்பு மாணவ மன்றத் தலைவி செல்வி மீரா இராஜரட்ணம் தலைமையில் இது நடைபெறும்.

முடிவில் வித்துக்கள் நாட்டுக்கூத்து 8ஆம் 9ஆம் 15ஆம் அங்கங்கள் கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரி தவத்திரு தனிநாயகம் தமிழ் மன்ற குழுமாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்படும்.

## ரயில் நிலையம் புதுப் பொலிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு தனியார் நிறுவனங்கள் சில பூச்சாடி போன்றவற்றை அன்பளிப்பாகவழங்கி புகையிரதநிலையத்தை அழகு படுத்த உதவுகின்றனர்.

இந்திய பொலிஸார் இங்கு இருந்ததால் இக் கட்டடம் பலத்த சேதமடைந்ததுடன் இங்கிருந்த பல பொருட்களும் காணாமல் போய்விட்டன.

ரயில்வே பகுதியும் இங்கு தேவைப்படும் பொருட்களை தற்போது அனுப்பி வருகின்றது.

## கலைவிழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில்நுட்ப நிறுவன மாணவர் மன்றத்தின் வருடாந்தக் கலை விழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளியன்று காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை ஏபெல்ஸ் அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரும், பிரபல கலைஞருமான இ முருகையனும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். மன்றத்தின் தலைவர் எஸ். செல்வநாயகம் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

## போதிக்கப்பட வேண்டும்

(கிளிநொச்சி

பாடசாலை மாணவர்களுக்கு சிறுவயதிலேயே உண்மை, நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றைப் போதிக்க வேண்டும். அவ்வாறான மாணவர்களினால் தான் எமது மக்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும்.

கனகாம்பிகைக் குளம் கனிஷ்ட வித்தியாலய மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சிக் கல்வி அதிகாரி திரு பொன். சபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு செ. நடராசா தலைமையில் நடை பெற்ற இப் போட்டியில் வணக்கத்துக்குரிய சுமணதாரதேரோ, கிளிநொச்சிக் கொத்தணி அதிபர் திரு.என்.சோதிநாதன், உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பத்மநாதன் ஆகியோர் குத்து விளக்கை ஏற்றி பரிசளிப்பு வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர். (49)

## மகளிர் அபிவிருத்திச் சங்கம் பாஷையூரில் அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)

இன்று நாம் உற்று நோக்கும் போது ஒவ்வொரு மனிதரிடமும் எவ்வளவோ திறமைகள் உள்ளன. மனித சக்தியைத் தகுந்த முறையின் பேணிப் பயன் படுத்துவதிற் மூலம் சிறந்த பயன்களை அடைய முடியும் "ஜனசக்தி" மூலம் வறிய மக்களின் வாழ்வு சுபீட்சமடையச் செயற்படவேண்டும்.

இவ்வாறு யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு.கே. சபாபதிப்பிள்ளை பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கச் சனசமூக நிலைய மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது இன்றைய சூழ் நிலையில் நாம் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்க உத்தியோகத்தர்கள் பொது மக்களுடன் சேர்ந்து கிராமிய முன்னேற்றத்திற்கும் மக்களுக்கும் உதவி வருவது பாராட்டிற்குரியது.

கடற்தொழில் பயிற்சிக் கல்லூரியை வெகு விரைவில் திறப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

மாதர் சங்கத்தலைவி செல்வி பிரான்சிஸ் சேவியாலில்கி றீட்டா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. (24)


## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES - AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி **10-06-1990** இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கு

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B.961)

# காஷ்மீரில் மதத்தலைவர் கொலை!
# இராணுவம் சுட்டதில் 47 பேர் பலி!!

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் அவாமிக் செயற்குழுவின் தலைவர் மௌலவி மொகமட் பாரூக் இறந்ததை அடுத்து காஷ்மீர் கலவரங்கள் மூண்டுள்ளன.

இதுவரை 3பெண்கள் உட்பட 47 பேர் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மௌலவி பாரூக் குண்டடிபட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட செய்தி கேட்டு பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்களும், தொண்டர்களும், மருத்துவ மனைக்கு முன்னால் நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சடலத்தை தம்மிடம் தரும்படி கேட்டார்கள். ஆனால் அதிகாரிகள் சடலத்தை கொடுக்க மறுத்தபடியால் கலவரம் மூண்டது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

ஆனாலும் மௌலவி பாரூக்கின் ஆதரவாளர்கள் பலவந்தமாக சடலத்தைப் பெற்றுக் கொண்டு ஊர்வலமாக பெரும் கோஷங்களுடன் பழைய நகரில் உள்ள செயற்குழு பணி மனைக்கு எடுத்துச் சென்றனர்.

இந்த வேளையில் கூட்டத்தைக் கலைக்க இராணுவத்தினர் சுட்டதில் 3 பெண்கள் உட்பட 47 பேர் கொல்லப்பட்டனர்.

இறந்த மௌலவி பாரூக் இந்தியா சுதந்திரமடைவதற்கு 1947க்கு முன்னமே காஷ்மீரில் தனி நாடு சுதந்திரக் கிளர்ச்சியை நடத்தி வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவர் தாம் இறப்பதற்கு முன்பு ஆற்றிய உரையில் காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை முனைப்புடன் நடத்தும் படியாக ஆலோசனை விடுத்திருந்தார்.

இவரை சுட வந்தவர்கள் காஷ்மீரிகள் போலத் தென்படவில்லை என்பதாக அவாமிக் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மிதவாதியான மௌலவி பாரூக்கின் கொலை குறித்து இந்தியப் பிரதமர் வி.பி. சிங்கும் ஏனைய தலைவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

## ருமேனியா இடைக்கால அதிபர் ஜனாதிபதி தேர்தல் மூலம் தெரிவு

(புக்காரெஸ்ட்)

ருமேனியாவில் ஞாயிறு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடைக்கால அதிபராக இருந்த எலியட் குயுப் 80சத வீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இந்த எண்ணிக்கையின் விபரத்தினை கம்பியூட்டர் கணிப்புகளில் இருந்து பெற்றுக் கொண்டனர்.

வெற்றி பெற்ற ஜனாதிபதியின் கட்சியான தேசிய மீட்பு முன்னணிக்கு பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் 2/3 பெரும்பான்மை வலு கிடைக்கும் நிலையில் இருக்கிறது.

கடந்த டிசம்பரில் நிக்காலாய் சவுத்தஸ் கியூ ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப் பட்ட பின்னர் இந்தத் தேர்தல்கள் ஞாயிறன்று நடைபெற்றன.

அதேவேளை ருமேனியாவில் ஞாயிறு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்கு ஒழுங்கீனங்கள் இடம்பெற்ற போதிலும் திட்டமிட்ட ஒழுங்கீனங்கள் நடைபெறவில்லை என்று அனைத்துலக கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.




## தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்தினால் பாகிஸ்தானுடன் பேச்சு

(டில்லி)

அமெரிக்க தேசிய பாராளுமன்ற கவுன்சிலின் இரண்டாவது உயர் அதிகாரி ரொபட்கேற்ஸ் இந்தியப் பிரதமர் வி.பி. சிங்கை நேற்று முன்தினம் புதுடில்லியில் சந்தித்தார்,

இவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் செய்தியினை வி.பி சிங்கிடம் கையளித்துள்ளார்.

காஷ்மீர் விவகாரம்தொடர்பாக இந்தியாவிற்கும், பாகிஷ்தானுக்கும் இடையில் நிலவி வரும் முறுகல் நிலையை குறைத்து சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் இவரது பயணம் அமையும் என்று ஜோர்ஜ் புஷ் கருதுகின்றார்.

ரொபட்கேற்ஸ் இந்தியாவுக்கு வர முன்னர் பாகிஸ்தானுக்கு சென்று பாகிஸ்தானிய ஜனாதிபதி முலாம் இஷாக்கானை சந்தித்துப் பேசினார்.

ஆனால் இந்தியப் பிரதமர் இச் சந்திப்பின் போது துணைக் கண்டத்தில் நிலவும் பதட்ட நிலைக்கு பாகிஸ்தானே காரணம் எனக் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

பஞ்சாப்பிலும், ஜம்முகாஷ்மீரிலும் பயங்கரவாதத்தையும் சீர்குலைவு சக்திகளையும் பாஸ்தான் ஆதரிப்பதை நிறுத்திக்கொண்டால் தான் இஸ்லாமாபாத்துடன் பேச்சு நடத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

காஷ்மீர் தொடர்பாக இந்

### வி. பி. சிங்

திய பாகிஸ்தானிடையே நிலவும் பகைமையை போக்க வாஷிங்டன் உதவும் என்றும் ஆனால் அதே வேளை காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில்மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

# உருகுவேயில் இருந்து இத்தாலிவரை
# உலகக் கிண்ண காற்பந்தாட்டம்

உலகளாகிய ரசிகர்களைக் கொண்டதும், பெரும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுவதுமான உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் அண்மித்து விட்டன. எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இப் போட்டிகள் பெரும் அரசியல் தலைவர்களில் இருந்து சாதாரண பொதுமகன் வரை சகல தரப்பினரையும் தன்பால் ஈர்த்துவிடும். உலகின் எல்லா நிகழ்வுகளிலும் இப் போட்டிகள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும். அது தவிர்க்க முடியாததே. வசதி படைத்தவர்கள் தற்போதே இத்தாலி நோக்கிப்புறப்பட ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் கோடிக்கணக்கானோர்

டது. ஆனால் இதனைத் தொடர்ந்து வந்த 2 ஆம் உலக மகாயுத்தம் 1942, 1946 உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்த இயலாமற் செய்து விட்டது. 12 வருடங்களுக்குப் பின் 1950இல் தென் அமெரிக்காவின் பிரேஸில் உலகக் கிண்ணப் போட்டிகளை மீண்டும் அரங்கேற்றியது. லீக் முறையில்நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் சில திறமையான அணிகள் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. எது எவ்வாறாயினும் உருகுவே இம் முறை கிண்ணத்தை வென்று ஐரோப்பாவில் இருந்து தென் அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றது.

ஜேர்மனியை 4-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து மகத்தான வெற்றியொன்றை இங்கிலாந்து பெற்றுக் கொண்டது. 1970ஆம் ஆண்டுப் போட்டிகள் மெக்ஸிக்கோவில் நடைபெற்றன. இறுதியாட்டத்துக்கு பிரேஸிலும் இத்தாலியும் தகுதி பெற்றன. இறுதியாட்டத்தில் இத்தாலியை 4 – 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, 3 முறை உலகக் கிண்ணத்தை வென்ற ஒரேயொரு நாடு என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டது. 1974இல் மே. ஜேர்மனி உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தியது. இறுதியாட்டம் மே. ஜேர்மனிக்கும் ஒல்லாந்துக்கும் இடையில் நடைபெற்றது.

### உலகக் கிண்ணம் - 1986

இறுதியாக நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகள் 1986இல் மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்றன இங்கு 24 நாடுகள் 6 பிரிவுகளாகப் பிரிந்து ஆடி பின்னர் அரையிறுதி ஆட்டம் கண்டு இறுதியாட்டத்துக்கு ஆர்ஜென்டீனாவும் மே. ஜேர்மனியும் தகுதி பெறுகின்றன. இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டீனா மே. ஜேர்மனியை 3–2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இந்த ஆட்டத்தின் கதாநாயகன் ஆர்ஜென்டீனாவின் தலைவர் டியாகோ மரடோனா இவ்வெற்றியுடன் சர்ச்சைக்கிடமற்றவகையில்

## உல்லாசப்பிரயாணிகள் மீது தாக்குதல்

(அமான்)

ஜோர்டான் தலைநகர் அமானில் பிரான்ஸ் உல்லாசப்

## கப்பல் கவிழ்ந்தது! 130 பேர் மாண்டனர்!!

(ஜாகாத்தா)

இந்தோனேசியாக் கரைக்கு அப்பால் திங்கள் இரவு பயணிகள் கபபல் ஒன்று மூழ்கியதில் 130க்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர்.

இதுவரை 56 சடலங்கள் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

ஜாகர்த்தாவின் வட கிழக்கே சுமார் 1600கிலோ மீற்றர் தொலைவில் மோசமான காலநிலை காரணமாகவும், கடல் கொந்தளிப்பினாலும் இக்கப்பல் கவிழ்ந்ததாக கூறப்படுகிறது. கப்பல் சிப்பந்திகள் உட்பட 133 பயணிகள் இக்கப்பலில் சென்றனராம்.

## ஆஸாத் காஷ்மீரத்திற்கு

கொண்டதும். பெரும் ஆரவத்துடன் எதிர்பார்க்கப்படுவதுமான உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் அண்மித்து விட்டன. எதிர் வரும் ஜூன் 8 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இப் போட்டிகள் பெரும் அரசியல் தலைவர்களில் இருந்து சாதாரண பொதுமகன் வரை சகல தரப்பினரையும் தன்பால் ஈர்த்துவிடும். உலகின் எல்லா நிகழ்வுகளிலும் இப் போட்டிகள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும். அது தவிர்க்க முடியாததே. வசதி படைத்தவர்கள் தற்போதே இத்தாலி நோக்கிப்புறப்பட ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் கோடிக்கணக்கானோர் தொலைக்காட்சிப் பெட்டியின் சிறிய திரையை ஆவலுடன் நோக்குகின்றனர். அதுவும் இல்லாதோர் பத்திரிகைகளைத் தேடி ஓடிக் கொண்டிருப்பார்கள். ஆம். அந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது தான் உலகக் கிண்ணம் காற்பந்தாட்டப் போட்டிகள். ஒரு மாத காலம் உலக மக்களை ஒரே திசையில் நோக்க வைக்கும் சக்தி கொண்டது இப் போட்டி.

**உலகக் கிண்ணம் ஆரம்பம்**

இப் போட்டிகள் கடந்து வந்த வரலாறு துன்பமானது. ஆனால் இன்று இதன் எழுச்சி பிரமிப்பானது. 1930 ஆம் ஆண்டில் முதன் முதலாக உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன. பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் நடைபெற்ற இப் போட்டிகளில் பங்கு பற்ற 13 நாடுகள் மட்டுமே உருகுவே சென்றன. ஐரோப்பாவில்இருந்து 5 நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் இதன் இறுதியாட்டத்துக்கு உருகுவேயும் ஆர்ஜென்டீனாவும் தகுதி பெற்றன. 1924, 28 ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்ற உருகுவே 4 க்கு 2 என்ற வண்ணம் முதலாவது உலகக் கிண்ணத்தை தன்வசமாக்கிக் கொண்டது.

தொடர்ந்து 1934 ஆம் ஆண்டுப் போட்டிகள் இத்தாலியில் நடைபெற்றன. இப்போட்டிகளில் 32 நாடுகள் பங்கு கொண்டன. இறுதியாட்டத்துக்கு இரு ஐரோப்பிய நாடுகளான இத்தாலியும் செக்கோஸ்லோ வாக்கியாவும் தகுதி பெற்று இத்தாலி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை ஐரோப்பாவுக்குக் கொண்டுவந்தது. 1938 ஆம் ஆண்டிலும் ஐரோப்பாவே போட்டிகளை நடாத்தியது. பிரான்சில் நடைபெற்ற இப் போட்டியில் இத்தாலியும் ஹங்கேரியும் இறுதியாட்டத்தில் மோதிக் கொண்டன. இத்தாலி 4-2 என்ற வித்தியாசத்தில் கிண்ணத்தைத் தக்க வைத்துக் கொண்

தொடர்ந்து வந்த 2 ஆம் உலக மகாயுத்தம் 1942, 1946 உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்த இயலாமற் செய்து விட்டது. 12 வருடங்களுக்குப் பின் 1950இல் தென் அமெரிக்காவின் பிரேஸில் உலகக் கிண்ணப் போட்டிகளை மீண்டும் அரங்கேற்றியது. லீக் முறையில்நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் சில திறமையான அணிகள் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. எது எவ்வாறாயினும் உருகுவே இம் முறை கிண்ணத்தை வென்று ஐரோப்பாவில் இருந்து தென் அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றது.

## நிர்மலன்

1954ஆம் ஆண்டுப் போட்டிகள் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றன, இறுதிப் போட்டியில் இரு ஐரோப்பிய நாடுகளான மே. ஜேர்மனியும், ஹங்கேரியும் மோதிக் கொண்டன. தகுதிகாண் போட்டியொன்றில் 8-3 என்ற கோல் கணக்கில் வென்ற ஹங்கேரி இறுதியாட்டத்தில் 3-2 என்ற கணக்கில் மே.ஜேர்மனியிடமே தோற்றுப்போயிற்று. இங்கு மே. ஜேர்மனி தன்னை ஒரு வலிமைமிக்க எதிர்காலச் சக்தியாக இனங்காட்டியதெனலாம்.

1958ஆம் ஆண்டுப் போட்டிகள் ஐரோப்பாவில் சுவீடன் நாட்டில் நடைபெற்றன.இந்த ஆண்டிலேயே பிரேஸில் நாடு காற்பந்தாட்டத்தில் இணையற்றதொரு சக்தியாகத் தன்னை இனங்காட்டி நின்றது. இன்னொரு முக்கியத்துவம் பீலே என்றொரு 17 வயதுப் பையன் பிரேஸில் அணியில் இடம்பெற்றதும், இறுதியாட்டத்தில் சுவீடனை 5 - 2 என்ற கோல் கணக்கில் வெல்ல உதவியதும் ஆகும். இன்று காற்பந்தாட்டத்தில் அக்கறையற்றவர்கள் கூட பீலேயை அறியாமல் இல்லை. எனவே 8 ஆண்டுகளின் பின் மீண்டும் உலகக்கிண்ணம் தென் அமெரிக்கா நோக்கிச் சென்றது. தொடர்ந்து 1962ஆம் ஆண்டுப் போட்டிகள் தென் அமெரிக்காவின் சிலியில் நடைபெற இறுதியாட்டத்தில் பிரேஸில் செக்கோஸ்லோவாக்கியாவை 3 - 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்துக் கிண்ணத்தைத் தன்வசமே வைத்துக் கொண்டது.

**பிரேஸில் சாதனை**

1966ஆம் ஆண்டு இங்கிலாந்தில் போட்டி நடைபெற்றது. இம்முறை இதுவரை தன்னை வெளிப்படுத்தாத இங்கிலாந்து தன்னை நிரூபிக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. அதேபோல இறுதியாட்டத்தில் புகழ்மிக்க வெம்ப்ஸி ஸ்ரேடியத்தில் மே. கோல் கணக்கில் தோற்கடித்து மகத்தான வெற்றியொன்றை இங்கிலாந்து பெற்றுக் கொண்டது. 1970ஆம் ஆண்டுப் போட்டிகள் மெக்ஸிக்கோவில் நடைபெற்றன. இறுதியாட்டத்துக்கு பிரேஸிலும் இத்தாலியும் தகுதிபெற்றன. இறுதியாட்டத்தில் இத்தாலியை 4 – 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, 3 முறை உலகக் கிண்ணத்தை வென்ற ஒரேயொரு நாடு என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டது. 1974இல் மே. ஜேர்மனி உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தியது. இறுதியாட்டம் மே. ஜேர்மனிக்கும் ஒல்லாந்துக்கும் இடையில் நடைபெற்றது. மே. ஜேர்மனி 2 - 1 என்ற ரீதியில் ஒல்லாந்தைத் தோற்கடித்தது. இருப்பினும்கூட மே. ஜேர்மனியின் வெற்றியைப் பாராட்டியோர் கூடவே ஒல்லாந்தின் துரதிஷ்டத்தையும் எண்ணிக் கவலைப்பட்டனர். 1978ஆம் ஆண்டுப் போட்டிகள் ஒல்லாந்து எவ்வளவு துர்ப்பாக்கியமான நாடு என்பதற்குச் சான்றாக அமைந்தது.ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற இப்போட்டிகளின் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்ற ஒல்லாந்து ஆர்ஜென்டீனாவிடம் தோல்வி கண்டது. இப்போட்டிகளில் மத்தியஸ்தர்களின் திறமை உச்ச நிலையில் இருக்கவில்லை என்று கருதுவோர் இன்றும் உளர். தொடர்ந்து இம்முறை இறுதியாட்டத்துக்கு வந்த ஒரு நாடு இரண்டுமுறையும் கிண்ணத்தை இழந்து நின்றதென்பது சகித்துக்கொள்ள முடியாததொரு துன்பமாகும்.

1982இல் பல புதிய சீர் திருத்தங்களுடன் உலகக் கிண்ணக் காற்பந்தாட்டம் நடாத்தப்பட்டது. இம்முறையின் கீழ் உலக நாடுகளில் 24நாடுகள் மட்டும் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு அழைக்கப்படும். இவ்விதமான மாற்றத்துடன் ஸ்பானியாவில் நடைபெற்ற போட்டியில் பிரேஸில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறாதது பெரும் ஆச்சரியத்துடன் நோக்கப்பட்டது. எனினும் மிகத்திறமையுடன்விளையாடி இத்தாலியும் மே.ஜேர்மனியும் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றன. இறுதியாட்டத்தில் இத்தாலி மே. ஜேர்மனியை 3–1 என்ற ரீதியில் தோற்கடித்து கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இந்தஆட்டத்திலேயே இத்தாலியவீரர் பாலோ றோஸி இத்தாலிய வெற்றிக்கு வழிவகுத்து சில மணி நேரங்களில் உலகப்புகழ் வாய்ந்தவராக உயர்ந்தார். இன்னொரு சிறப்பம்சம் உலகக் கிண்ணத்தை 3 முறை பெற்ற இரண்டாவது நாடு என்று பிரேஸிலுக்கு அடுத்து இத்தாலி தன் பெயரைப் பதித்துக் கொண்டதாகும்.

இறுதியாக நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகள் 1986இல் மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்றன இங்கு 24 நாடுகள் 6 பிரிவுகளாகப் பிரிந்து ஆடி பின்னர் அரையிறுதி ஆட்டம் கண்டு இறுதியாட்டத்துக்கு ஆர்ஜென்டீனாவும் மே. ஜேர்மனியும் தகுதி பெறுகின்றன. இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டீனா மே. ஜேர்மனியை 3–2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இந்த ஆட்டத்தின் கதாநாயகன் ஆர்ஜென்டீனாவின் தலைவர் டியாகோ மரடோனா இவ்வெற்றியுடன் சர்ச்சைக்கிடமற்றவகையில் உலகில் தலை சிறந்த காற்பந்து வீரனாக மரடோனா அங்கீகரிக்கப்படுகின்றார் இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தையும் விடவும் சிறப்பான ஆட்டமாக இன்றும் கருதப்படுவது பிரேசில், பிரான்ஸ் நாடுகளுக்கு இடையிலான கால் இறுதிஆட்டமாகும் இதன்முடிவுபெனால்டிக் மூலமே தீர்மானிக்கப்பட்டது. பிரேஸில் வீரர் சீக்கோ தவறவிட்ட பெனால்டி கிக் பிரான்சுக்கு வெற்றியைக் கொடுக்கிறது. உலகப் புகழ் பெற்றபீலேஇந்தஆட்டத்தைப்பற்றி உணர்ச்சி வசப்பட்டுக் கூறியுள்ளார்.

இன்று மீண்டும் இன்னொரு உலகக்கிண்ண காற்பந்தாட்டப்போட்டி 24 நாடுகள் போட்டியிடுகின்றன. ஒவ்வொரு நாடும் தனக்கே இவ்வரிய வெற்றிக்கிண்ணம் கிடைக்கவேண்டும் என்று எண்ணுவது இயல்பே.ஆனால் அதற்காக ஒவ்வொரு நாடும் மேற்கொள்ளும் முயற்சிகள், செலவழிக்கும்பணம்,வீரர்கள் பயிற்சிகள், தெரிவுகள், மீண்டும் பயிற்சிகள் ஊகங்கள் பந்தயப் பணங்கள் எல்லாமே இப்போட்டியைப் பொறுத்தவரையில் உயர் மட்டத்திலேயே அமையும். அதனாற்றான் இது இன்று உலகின் அதிகவனத்துக்குரிய நிறைந்த எதிர்பார்ப்புக்குரிய போட்டியாக மாறிவிட்டது. ஜூன் 8ஆம் திகதி மிலான் நகரில் கமரூன்ஆர்ஜென்டீனா நாடுகளுக்கிடையில் நடைபெறும்போட்டியுடன் ஆரம்பமாகும் இக்கால் பந்தாட்டத் திருவிழாஜூலைமாதம் 8ஆம் திகதிய இறுதியாட்டத்துடன் முடிவடையும் இறுதியாட்டத்தில் மோதப்போகும் அவ்விரு அணிகளும் யார் யார்? இதை ரசிகர்களின் ஊகங்களுக்குவிட்டுவிடுதலே தற்போதைக்குப் பொருத்தமாக இருக்கும்.

ஏற்படுத்தும் வகையில் இவரது பயணம் அமையும் என்று ஜோர்ஜ் புஷ் கருதுகின்றார்.

றொபட்கேற்ஸ் இந்தியாவுக்கு வர முன்னர் பாகிஸ்தானுக்கு சென்று பாகிஸ்தானிய ஜனாதிபதி மூலாம் இஷாக்கானை சந்தித்துப் பேசினார்.

ஆனால் இந்தியப் பிரதமர் இச் சந்திப்பின் போது துணைக் கண்டத்தில் நிலவும்

## உல்லாசப்பிரயாணிகள் மீது தாக்குதல்

(அமான்)

ஜோர்டான் தலைநகர் அமானில் பிரான்ஸ் உல்லாசப் பிரயாணிகள் சிலர் ஆயுதம் தாங்கியவர்களினால் தாக்கப் பட்டனர்.

இத் தாக்குதலில் குறைந்தது எட்டுப்பேர் காயமடைந்திருக்கிறார்கள்.இவர்களில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலில் ஞாயிறு இடம் பெற்ற ஒரு தாக்குதலில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்தே ஜோர்டானில் திங்கட்கிழமை தாக்குதல் இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

ஞாயிறு நடந்த தாக்குதலை அடுத்து இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களிலும் கலவரங்கள் மூண்டுள்ளன.

## 130 பேர் மாண்டனர்!!

(ஜாகாத்தா)

இந்தோனேசியாக் கரைக்கு அப்பால் திங்கள் இரவு பயணிகள் கபபல் ஒன்று மூழ்கியதில் 130 க்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர்.

இதுவரை 56 சடலங்கள் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

ஜாகர்த்தாவின் வட கிழக்கே சுமார் 1600கிலோ மீற்றர் தொலைவில் மோசமான காலநிலை காரணமாகவும்,கடல் கொந்தளிப்பினாலும் இக்கப்பல் கவிழ்ந்ததாக கூறப்படுகிறது. கப்பல் சிப்பந்திகள் உட்பட 133 பயணிகள் இக்கப்பலில் சென்றனராம்.

## ஆஸாத் காஷ்மீரத்திற்கு தேர்தலில் மோசடி

(முஸாபராபாத்)

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆஸாத் காஷ்மீரில் நேற்று தேர்தல்கள் நடைபெற்றன.

இந்தத் தேர்தல்களின் வாக்குப் பதிவின் போது மோசடிகள் இடம் பெறலாம் என பாகிஸ்தானிய எதிர்க்கட்சித் தலைவர் எச்சரித்துள்ளார்.

ஆஸாத் காஷ்மீர் பிரதேசத்தின் பிரதமர் குறிப்பிடும் போது 'ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி காஷ்மீர் தேர்தல்களில் மோசடிகளைப் புரிந்தால் ஒன்பது கட்சிகள் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி கூட்டணி தேர்தல்முடிவுகளை நிராகரிக்கும்' என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன் மத்திய அரசாங்கத்தின் பிரதமர் பெனாசிர் பூட்டோ காஷ்மீர் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த முயன்று வருகின்றார். எனவே நாம் எதிர்காலத்தில் பாகிஸ்தானுடனான எமது உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது என்றும் ஆஸாத் காஷ்மீர் பிரதமர் குறிப்பிட்டார்.

## மீண்டும் கியூ வரிசை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் இவ்வாரம் முதல் கியூ வரிசையில் நின்று பஸ் வண்டிகளில் ஏறி பிரயாணத்தைச் செய்ய வேண்டும் என்ற நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தற்பொழுது பிரயாணிகள் இந்த நடை முறையினைக் கடைப் பிடித்து வருகின்றனர். (29)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

உரும்பராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து விக்னேஸ்வரன் ஞாபகார்த்த ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடாத்தவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் ஏனைய கழகங்கள் செயலாளர் திருக்குமரன் சனசமூக நிலையம், உரும்பராய் மேற்கு, உரும்பராய் என்ற முகவரிக்கு இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (42)

## பாடசாலைத் தேவைகளுக்கு பொதுமக்கள் பலர்உதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு சுமார் ஐயாயிரம் ரூபா செலவில் நானூறு கலன் கொள்ளக் கூடிய தண்ணீர்த் தொட்டியொன்றை காலஞ் சென்ற சு. தளையசிங்கம் ஞாபகார்த்தமாக கண்ணுத்துரை தேவதாஸ் என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார்.

மேலும் இப் பாடசாலையின் பாவனைக்காக இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான மூன்று ஸ்கிரீன்களை செல்வி சதாசிவம் நந்தினி என்பவர் வழங்கியுள்ளார்.

அத்துடன் பொதுமக்களின் உதவியுடன் எழுநூறு ரூபா செலவில் பெயர்ப்பலகை அமைக்கப்பட்டுள்ளது.

இவை போன்று பல வேலைத் திட்டங்கள் பொது மக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட விருப்பதாக இவ் வித்தியாலயத்தின் அதிபர் திரு சு.வீரசிங்கம் தெரிவித்தார். (22)

## விளையாட்டு மைதானம்

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலையில் விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பான பொதுக்கூட்டம் வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலய மண்டபத்தில் வந்தாறுமூலை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பிரசன்னா தலைமையில்நடைபெற்றது.

திரு. பிரசன்னா தலைமையில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. இவ்விளையாட்டு மைதான திருத்த வேலைகளை சிங்கோ விளையாட்டுக் கழக உறுப்பினர்களும், பொது மக்களும் மேற்கொண்டனர்.

நீண்ட காலமாக வந்தாறுமூலையில் ஒரு சிறந்த விளையாட்டு மைதானம் இல்லாத குறையை போக்கியமைக்காக பொதுமக்கள் அனைவரும் திரு பிரசன்னாவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர். (29)

## ப. நோ. கூ. சங்கத்துக்கு புதிய ட்ரக் வாகனம்

(புங்குடுதீவு)

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு நிதி, உணவு கூட்டுறவு கடற்றொழில் அமைச்சினால் நிவாரண அடிப்படையில் சுமார் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியுடைய ட்ரக் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்திற்கு பொருட்கள் கொண்டு செல்வதற்கு இதுவரை காலமும் தனியார் வாகனங்களே பயன்படுத்தப்பட்டு வந்தன.

இக்குறை தற்போது கிடைக்கப் பெற்றுள்ள ட்ரக் வாகனத்தின் மூலம் நிவர்த்தியாகியுள்ளது. (22)

## சுயதொழில் முயற்சிக்கான கைப்பணிப் பயிற்சி

(சாவகச்சேரி)

படித்து வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்து முகமாக பனம்பொருள் கைப்பணிப்பயிற்சியளிப்பதற்கான முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச சுகாதாரப் பகுதியினர் சுறுசுறுப்பாக உள்ளனர்.

ஆரம்பக் கட்டமாக இப் பனம்பொருள் கைப்பணிப் பயிற்சியளிப்பதற்கென முப்பது படித்த யுவதிகளை தெரிவு செய்வதென்றும், இப் பயிற்சிபெறும் யுவதிகளுக்கு செஞ்சிலுவைச்சங்கம் வேதனமாக ஒரு சிறு தொகையை மாதாமாதம் வழங்கி உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளுக்கான இளம் பெண்களின் தெரிவு எப்பொழுது நடைபெறும்? எங்கே வைத்து தெரிவு செய்யப்படும் என்பன போன்ற விபரங்கள் பின்பு தெரிவிக்கப்படவுள்ளன. (35)

## இடமாற்றக் கோரிக்கை

(மன்னார்)

நானாட்டானில் உள்ள கூட்டுறவு சங்க தலைமையலுவலகத்தை மடு உதவிக் கோட்ட ஆணையாளர் பகுதிக்கு இடமாற்றம் செய்வது குறித்து கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

உயர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

## காணியற்றவர்களுக்கு பளையில் காணிக் கச்சேரி

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் காணியற்றவர்களுக்கு, உதவி அரசாங்க அதிபரின் தலைமையின் கீழ் குடியிருப்புக் காணி என்பதன் அடிப்படையில் ஒரு ஏக்கர் காணி வழங்கப்படுகின்றது.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள மாசார், சோறன்பற்று, கோவில் வயல், புலோப் பளை, புலோப்பளை மேற்கு, பளை ஆகிய கிராமசேவகர் பிரிவில், காணிக் கச்சேரி முடிவடைந்து, பெயர்ப் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கின்றது.

ஏனைய கிராமசேவகர் பிரிவுகளுக்கும் காணிக்கச்சேரி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (63)

## விளையாட்டு போட்டி

ஓமந்தை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் இல்ல விளையாட்டுப்போட்டி எதிர் வரும் 26 ஆம் திகதி நடைபெறும்.

வள்ளுவர், நாவலன், பாரதி என்றமூன்று இல்லங்களின் பிரிவுகளிடையே போட்டிகள் நடை பெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் சுமார் ஆயிரம் மாணவர்கள் பங்கு பற்ற உள்ளனர்.

# ராதாவின் நினைவாக நடைபெற்ற தமிழ் திறன் போட்டி முடிவுகள்

(வண்ணார்பண்ணை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி லெப்டினன் கேணல் ராதா அவர்களின் 3-ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி ஐயனார் கோயிலடி சனசமூக நிலையத்தினரால் வண்ணார் பண்ணை வடமேற்கு கிராம சேவகர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கின்ற மாணவர்களிடையே நடாத்தப் பெற்ற தமிழ்த்திறன் போட்டியில் வெற்றியீட்டியோர்கள் விபரம் வருமாறு:-

பாலர் பிரிவுக்கான சொல்வதெழுதல் போட்டியில் முதலாம் இடம் கோ. ஸ்ரீவித்தியா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் பா. நிர்மலா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் கு. நிஷாந்தினி (யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

பாலர் பிரிவுக்கான உறுப்பெழுத்து போட்டியில் முதலாம் இடம் கு நிஷாந்தினி (யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்), இரண்டாம் இடம் யோ. யசிந்தா (யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்), மூன்றாம் இடம் ம. கிருஷ்ணராஜ் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோர் பெற்றுள்ளனர்.

பாலர் பிரிவுக்கான கட்டுரை எழுதுதல் போட்டியில் முதலாம் இடம் கோ. ஸ்ரீவித்தியா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் ஸ்ரீ சுதாயினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் மு. மஞ்சுளா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவுக்கான கட்டுரை எழுதுதல் போட்டியில் முதலாம் இடம் வி. பவளகாந்தன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), இரண்டாம் இடம் சி. யாமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் த. உமையாள் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவுக்கான கட்டுரை எழுதுதல் போட்டியில் முதலாம் இடம் யோ. விஜிதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) இரண்டாம் இடம் க. தேவராணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் ஸவிதா நடன சபாபதி சர்மா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றனர்.

மேற்பிரிவுக்கான கட்டுரை எழுதுதல் போட்டியில் முதலாம் இடம் இ. வசந்தகுமார் (யாழ். இந்துக் கல்லூரி), இராண்டாம் இடம் என். தவனேசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் சி. தனுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

கீழ்ப்பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் இ. சுரேஸ்குமார் (யாழ் இந்து கல்லூரி), இரண்டாம் இடம் ந. ஹேமலதா, மூன்றாம் இடம் க. அனுஷாதேவி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் இ. புஷ்பமாலா (யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம்) இரண்டாம் இடம் இ. சுசீத்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் இ. விமலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர்.

மேற்பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் கி. வசந்தகுமார் (யாழ் இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் ம. சத்தியகுமார் (யாழ் பெரிபுலம் மகாவித்தியாலயம்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஐயனார் கோயிலடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற லெப்டிணன் கேணல் ராதா அவர்களின் 3 ஆவது மாபெரும் நினைவு தினவிழாவில் வைத்து வண்ணார் பண்ணையைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மறைந்த போராளிகளின் தந்தைமார், தாய்மார், சகோதரர்களால் வழங்கப்பட்டன.

## சிறிய பைக்கற்றுகளில் உர விற்பனை

(பண்டத்தரிப்பு)

வறிய விவசாயிகளின் நலன் கருதி 2, 5, கிலோ பைக்கற்றுகளில் உரங்களை நல்லூர் கமநல சேவை நிலையம் விற்பனை செய்கின்றது.

அதிகரித்த விலைகளில் 50 கிலோ பைக்கற்றில் வரும் உரங்களை கொள்வனவு செய்து பயிர்களுக்கு இட முடியாது விவசாயிகள் பட்ட கஷ்டம், மன வேதனைகளைப் போக்க நல்லூர்கமநலசேவை நிலையம் மேற்கொண்ட விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கையை விவசாயிகள் பாராட்டுகின்றனர்.

இப்படிச் சிறிய பைக்கற்றுகளில் தென்னை, எலுமிச்சைகட்கான உரக் கலவைகளையும் விற்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

## பரிசளிப்பு விழா

(கல்லாறு)

கடந்த வருட புலமைப் பரிசிலுக்கான போட்டிப்பரீட்சையில் பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் முதற்தடவையாகச் சித்தியடைந்ததுடன் சா. சுதன் என்னும் மாணவன் 174 புள்ளிகள் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திலேயே முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டான்

இதனையொட்டி மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும், சித்தியெய்திய கு. சுஜாதா, ப. கஜேந்திரன் ந. ராஜீவ்,

## சிகிச்சை நிலையத்தை மீண்டும்இயக்க நடவடிக்கை

(வவுனியா)

கோவிற் புதுக் குளத்தில் இயங்கி வந்த கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி வவுனியா நகரசபை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கேட்டுள்ளது.

வவுனியாநகராட்சிமன்றஎல்லைக்குட்பட்ட கிராமங்களாகியகோவிற்குளம் புதுக் குளம் வெளிக்குளம், தெற்கிலுப்பைக்குளம், ஆகியவற்றுடன், இக் கிராமங்களை அமைத்துள்ள பல கிராமங்களும் மேற்படி சிகிச்சை நிலையத்தை இயங்கச் செய்வதன் மூலம் பயன் பெறும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இக் கிராமங்களில் வசிக்கும் மக்களின் சுகாதார வசதியைக் கருத்தில் கொண்டு, 82 ஆம்ஆண்டு நடுப்பகுதி வரை மேற்படி சிகிச்சை நிலையமொன்று இயங்கி வந்தது என்றும் கடந்தகாலத்தில் தொடர்சியாகஏற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகஇச்சிகிச்சைநிலையம்செயலிழந்ததுஎன்றும் வவுனியா நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந் நிலையத்தை இயங்க வைப்பதன் மூலம், மேற்குறிப்பிட்ட இக்கிராம மக்கள் நன்மையடைவதோடு, ஏனைய சிகிச்சை நிலையங்களின் வேலைப் பளுவையும் குறைப்பதற்கு வாய்ப்புண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## ஓராண்டு நினைவஞ்சலி



இளம்புலி

**வள்ளுவன்**

(த. இரதிநாதன்)

வீர ஜனனம்: 64.03.08 வீர மரணம்: 89.05.22

ஓ . . . எங்கள் வீர மறவா
சுதந்திர மலர் பறிக்க
சுய நலன்கள் தனை மறந்து
விடுதலைப் பாதையிலே
வீறுநடை போட்ட உன்னை
உப்புவெளி அரவணைத்ததால்
உதிரமதைச் சிந்தி
பேருறக்கம் கொண்டாயோ
பெரும் துயரம் தனையீந்து!

- குடும்பத்தினர்.

(R 497)

வாகன உரிமையாளர்களே!

❋ உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!

வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

கப்பட்டுகின்றது.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள மாசார், சோறன்பற்று, கோவில் வயல், புலோப் பளை, புலோப்பளை மேற்கு, பளை ஆகிய கிராமசேவகர் பிரிவில், காணிக் கச்சேரி முடிவடைந்து, பெயர்ப் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கின்றது.

ஏனைய கிராமசேவகர் பிரி

யாலய மாணர்ர்வகளின் இல்ல விளையாட்டுப்போட்டி எதிர் வரும் 26 ஆம் திகதி நடைபெறும்.

வள்ளுவர், நாவலன், பாரதி என்றமூன்று இல்லங்களின் பிரிவுகளிடையே போட்டிகள் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் சுமார் ஆயிரம் மாணவர்கள் பங்கு பற்ற உள்ளனர்.

கிலோ பைக்கற்றில் வரும் உரங்களை கொள்வனவு செய்து பயிர்களுக்கு இட முடியாது விவசாயிகள் பட்ட கஷ்டம், மனவேதனைகளைப் போக்க நல்லூர்கமநலசேவை நிலையம் மேற்கொண்ட விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கையை விவசாயிகள் பாராட்டுகின்றனர்.

இப்படிச் சிறிய பைக்கற்று

(கல்லாறு)

கடந்த வருட புலமைப் பரிசிலுக்கான போட்டிப்பரீட்சையில் பெரிய கல்லாறு உதய புரம் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் முதற்தடவையாகச் சித்தியடைந்ததுடன் சா. சுதன் என்னும் மாணவன் 174 புள்ளிகள் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திலேயே முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டான்

இதனையொட்டி மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும், சித்தியெய்திய கு. சுஜாதா, ப. கஜேந்திரன் ந. ராஜீவ், ஆ. குமுதினியுடன் முதலாம் இடத்தைபெற்ற மாணவரையும் கௌரவித்து பாராட்டு ஊக்குவிப்பு பரிசளிப்பு விழா ஒன்றை நடாத்தி முன் மாதிரி காட்டியுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட கல்விஅலுவலர் விஞ்ஞான கல்வி அதிகாரி திரு. கோ சிவலிங்கமும் சிறப்பு விருந்தினராக கல்லாறுவலய கொத்தணி அதிபர் திரு. பொ. ஆனந்தராசாவும் வருகை தந்து மாணவர்களைப் பாராட்டிப் பேசினர். பாடசாலை அதிபர் திரு. மூ. பொன்னையா தலைமையில் இது நடைபெற்றது. (45)

டிணன் கேணல் ராதா அவர்களின் 3 ஆவது மாபெரும் நினைவு தினவிழாவில் வைத்து வண்ணார் பண்ணையைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மறைந்த போராளிகளின் தந்தைமார், தாய்மார், சகோதரர்களால் வழங்கப்பட்டன.

ஓ . . . எங்கள் வீர மறவா
சுதந்திர மலர் பறிக்க
சுய நலன்கள் தனை மறந்து
விடுதலைப் பாதையிலே
வீறுநடை போட்ட உன்னை
உப்புவெளி அரவணைத்ததால்
உதிரமதைச் சிந்தி
பேருறக்கம் கொண்டாயோ
பெரும் துயரம் தனையீந்து!

- குடும்பத்தினர்.

(R 497)


## வாகன உரிமையாளர்களே!

* உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!
* சகலவிதமான மசகு எண்ணெய் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வைபவங்களுக்குத் தேவையான
* கதிரைகள், * தகரப் பந்தல் வாடகைக்குக் கிடைக்கும்.

தேவை: உருக்குத் தளபாடங்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ்**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

B. 959



## வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

* கடிதங்கள் * பார்சல்கள் * தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்புகொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

**D.H.L. INTERNATIONAL LTD.**

C/o. COSMOS MARKETING SERVICES
337, KASTHURIYAR ROAD.
JAFFNA.

(B. 969)



வாடிக்கையாளர் வியாபாரிகளுக்கு!

உங்கள் தேவைகளுக்கு உகந்த அளவில்

எம்மிடம்: மொத்தமாகவும் சில்லறையாகவும்

**அரிசி தரம் - 1 அரிசி தரம் - 2** பெற்றுக்கொள்ளலாம்.

எமது கிறைன்டிங் ஆலையில்

* மிளகாய்த்தூள் * மாவு அரைத்தல் * அரிசி திட்டல் * நெல் உடைத்தல்

அனைத்து தேவைகளும் செய்து கொள்ளலாம்

அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:

# சரஸ்வதி அரிசி ஆலை

ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(B-960)

### சிந்தனைக்கு

கூட்டத்தில் நின்று, ஒருபோதும் கூறாதே அறிவுரை

- அரபுப்பழமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 23 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

## "ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே"

இஸ்ரேல் ஆக்கிரமித்த அரபுப்பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலியர் வெளியேற வேண்டுமென்றும் பாலஸ்தீனியர்கள் தங்கள் சொந்த மண்ணில் மீண்டும் குடியேற வேண்டுமென்றும் இதற்கு இலங்கை அரசு தன்னாலான உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது என்றும் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருக்கிறார்.

தென்கிழக்காசிய பிராந்திய மூன்றாவது இஸ்ரேலிய மாநாட்டை கொழும்பில் ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

பாலஸ்தீனியர்கள் அவர்களுடைய சொந்தமண்ணில் இருந்து விரட்டப்பட்டு யூதர்களை அந்த மண்ணில் கொண்டுவந்து குடியேற்றி உருவாக்கப்பட்டதுதான் இஸ்ரேல். அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் உதவியுடனும், ஆசியுடனும் உருவானது இஸ்ரேல். இதனால் பாலஸ்தீனியர்கள் இன்று இருக்க இடமில்லாமல் அலைந்து திரிகிறார்கள்.

பாலஸ்தீனியர்களுக்கும் புகலிடமளிக்கும் அரபு நாடுகளும் இஸ்ரேலியரின் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன. அரபுப் பிரதேசங்களான ஜோர்டான், எகிப்து எல்லைப் புறங்களையும் இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ளது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் பாலஸ்தீனியர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

பாலஸ்தீனியர்கள் தங்கள் சொந்தமண்ணில் மீண்டும் குடியேறி வாழவேண்டுமென்பதில் மனிதாபிமானமுள்ள மக்களுக்கு இரண்டு கருத்து இருக்க முடியாது.

தங்கள் மண்ணை மீட்பதற்காகப் போராடிவரும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கு அரபு நாடுகளின் ஆதரவு மட்டுமல்ல மூன்றாவது உலக நாடுகளின் ஆதரவும் இருக்கிறது.

பாலஸ்தீனியர்களுக்கென ஒரு நாடு இப்பொழுது இல்லையென்றாலும்கூட பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடிவரும் யாசிர்அரபாத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் மூன்றாவது உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது உலக நாடுகளின் ஆதரவுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஐ.நா. கூட்டங்களில் தலைவர் யாசிர்அரபாத் கலந்துகொண்டு பாலஸ்தீனியர்களுக்கு இப்பிரதிநிதித்துவம் வகித்துக் குரல் கொடுக்கிறார்.

ஐ. நா. தலைமை நிலையம் அமெரிக்காவில் நியுயோர்க் நகரில் இருக்கிறது. 1988 ஆம் ஆண்டில் ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள யாசிர்அரபாத் அழைக்கப்பட்டபோது அவருக்கு விசா

# அன்று மகா விஹாரையை தரை மட்டமாக்கிய மகாயானம் இன்று மீண்டும் வருகின்றது

இலங்கையில் தேரவாத பௌத்தர்களுக்கும், மகாயான பௌத்தர்களுக்குமிடையே, கி. பி. நான்காம் நூற்றாண்டில் பெரும் பகை மூண்டது. அப்போது மன்னனாக இருந்த மகாசேனன் (கி. பி. 325 - 352) மகாயான பௌத்தம், பக்கம் சாய்ந்தான் அதுவரை நிலவி வந்த தேரவாத பௌத்தத்தில், மஹாவிகாரை பெருமளவிற்குஇடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. பிக்குகள் மத்தியில் குறிசுடு படலம் ஆரம்பமாகியது. இதன் மூலம் பௌத்த துறவிகள் மத்தியில் ஒரு இரத்தம் தோய்ந்த வரலாறு இடம் பெற்றது. தேரவாத பிக்குகள் அல்லது துறவிகள் தலைமறைவு வாழ்வு நடாத்த வேண்டியேற்பட்டது. ஆயினும் நீண்டகாலமாக இலங்கையில் நிலைத்து வந்த தேரவாத பௌத்தர்கள் இதில் இறுதி வெற்றி பெற்றனர். மீண்டும் அரசமதமாக தேரவாத பௌத்தம் ஆகியது.

தென்னிந்தியாவில் இருந்து வந்த ''சங்கமித்த'' எனப்படும் பிக்கு, மகாசேன மன்னனை, மகாயான பௌத்த மதப்பக்கம் சாரவைத்தார். அதையொட்டியே மகாயான தேரவாத சண்டை ஆரம்பமாகியது. இதனால் மகா விஹாரையின் தலைமை பிக்குவாக இருந்த மஹாநாம தேரோ, தென்னிந்தியா மீதும் தமிழர் மீதும் பெரும் சீற்றம் கொண்டார். தென்னிந்தியாவில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் இலங்கையில் பிரதிபலிக்கும் என உணர்ந்தார். குறிப்பாக தென்னிந்தியாவிலிருந்தே தேரவாத பௌத்தத்திற்கு ஆபத்து வருமென அஞ்சியதால், தென்னிந்தியாவிற்கு எதிரான எண்ணக் கருவைப் புகட்டும் ஐதீகத்தை எழுதலானார். அவ்வாறே அவரால் எழுதப்பட்ட நூலே ''மஹாவம்ச'' என்பதாகும். அந்நூலில் ஏகப்பட்ட வகையில் தமிழ் இன எதிர்ப்புணர்வு இருப்பதை நாம் காணலாம். இதுவே இற்றைவரையுள்ள [illegible]

கேலிச் சித்திரத்தில் யப்பான் இலங்கைக்கு கொடுத்த நிதியுதவியைவிட மகாயானம் என்னும் மதப்பிரச்சனை பெரிதாகும் என வரையப்பட்டுள்ளது. இம் மகாயான பிக்குவிற்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி என்ற வகையிலும், பௌத்த சாசன அமைச்சர் என்ற வகையிலும், பிறேமதாசாவிடம் பல பௌத்த பீடாதிபதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த வகையில் இது பிறேமதாசா நிர்வாகத்திற்கு பெரும் பெரும் தலையிடியை ஏற்படுத்தும் பிரச்சனையாக உள்ளது.

**சாரணன்**

இப் பிக்குவானவர், மகாயான பௌத்தத்திற்கு ஒரு சங்கத்தை இலங்கையில் நிறுவுவாரேயானால் அது பெரும் சர்ச்சைகளை கொண்டு வரும் தன்மை வாய்ந்தது என்பதை கடந்த சில வாரகால நிகழ்வுகளைக் கொண்டும் இலங்கையின் வரலாற்றைக் கொண்டும் நாம் உணரலாம். எனவே இது பற்றிய சில அடிப்படைகளை நாம் தெரிந்து வைத்திருத்தல் அவசியம்.

ஏறக்குறைய கி. மு. 486ஆம் ஆண்டு கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்த சில தினங்களின் பின்பு அவரது சீடர்களாகிய பௌத்த பிக்குகள் பலர் முதலாவது மகா சங்கத்தை கூட்டினார். அம் மகாநாட்டில் பௌத்த மதம் பற்றிய வரையறைகள் மேற்கொள்ளப்பட்டன. இது நிகழ்ந்து ஓர் நூற்றாண்டின் பின்பு வைசாலியில் கூடிய இரண்டாவது மகாநாட்டில் பிக்குகளிடையே ஏற்பட்ட கோட்பாட்டு வேறுபாடு காரணமாக தேரவாதம் என்றும் மகா சங்கிகர் என்றும் இரு பிரிவினர் தோன்றினர் கி மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் ஆதரவில் பாடலிபுரத்தில் நிகழ்ந்த மூன்றாவது மகாநாட்டில் தேரா [illegible]

நிர்வாணத்திற்கான சிறிய ஊர்தி அல்லது வாகனம் என்பதாகும். இந்த வகையில் இன்று உலகில் மகாயானம், ஈனயானம், வச்சிரயானம் என பல பிரிவுகள் உள்ளன. இதில் மகாயானம் யப்பானில் வழக்கத்திலும் ஈனயானம் இலங்கையில் வழக்கத்திலும் வச்சிரயானம் தீபெத்திலும் வழக்கத்தில் உள்ளன. வச்சிரயானம் தொடர்ந்து கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியாவில் தோன்றி பின்பு தீபெத்திற்கு பரவியதாகும். இந்தியாவில் தோன்றிய இம் மூன்று பௌத்த பிரிவுகளும் இந்தியாவில் அருகி அவை அண்டை நாடுகளில் பரவி உள்ளன.

பௌத்தத்திற்கு எதிராக சைவ, வைஷ்ணவ சமயங்களின் எழுச்சிக்கு ஈடுகொடுக்கும் தன்மையில் மகாயானம் தோன்றி வளர்ந்தது எனலாம். தேரவாதத்தின்படி புத்தர் அருள் புரிபவரல்ல. வரம் கொடுப்பவரல்ல. நிர்வாணம் என்பது ஒருவன் தன் முயற்சியால் அடைய வேண்டும் என்பதே. அதன் அடிப்படைக் கோட்பாடு மகாயானத்தின்படி புத்தர் எல்லாம் வல்லவர் அல்லாரானாலும் தன்னை வழிபடுபவர்களுக்கு அருள் புரியக் கூடியவர் என்ற கருத்துண்டு. இது இந்து சமய வழிபாட்டுக் கருத்தை ஓரளவிற்கு ஒட்டியுள்ளது. மேலும் கி.பி. 1ஆம் நூற்றாண்டில் பாரசீகத்திலிருந்தும் அதற்கு அப்பால் இருந்தும் பெற்ற கருத்துக்களின் மூலம் கிறிஸ்தவ செல்வாக்கு மகாயானத்தில் காணப்படுகின்றது. இந்த வகையில் மகாயானம் என்பது இந்து மதத்தை நோக்கிய, பௌத்தத்தில்எழுந்தஓர்சீர்திருத்தம்எனசொல்லப்படுவதும் உண்டு எது எவ்வாறாயினும் இந்தியாவில் தேரவாதமும் மகாயானமும் இந்து மதஎழுச்சியினால்பெருமளவு அடியுண்டன. இறுதியாக இஸ்லாமிய படையெடுப்பின், மூலம் மிஞ்சியிருந்த மகாயான, வச்சிரயான பிரிவினரும் அடியுண்டு போயினர். குறிப்பாக இஸ்லா [illegible]

லுள்ள பௌத்தம் தேரவாதமல்ல என்று வாதடுகின்றார். பௌத்தத்தை பேணிப் பாதுகாக்கவும், வளர்க்கவும் புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு இலங்கையென இலங்கை வாழ் தேரவாத பௌத்தர்கள் நம்புகின்றனர். தேரவாதமா, மகாயானமா என்ற வாதப்பிரதி வாதங்கள் ஒரு புறம் மிருக்கட்டும். பௌத்த பிக்குவானவர்அரசியலுக்கு அப்பாற்பட்டவராய் இருக்க வேண்டுமென்ற

கௌதம புத்தரின் போதனை இலங்கையைப் பொறுத்த வரையில் நடைமுறையில் இல்லை என்பது மட்டும் உண்மை.

இவ் வரலாற்று பின்னணியில் இப் பிரச்சினையை பார்க்குமிடத்து மகாயானத்திற்கு மாறிய விபாசி தேரோ, ஒரு சங்கத்தை இங்கு நிறுவுவாரானால் மகாயானம், தேரவாதம் என்ற முரண்பாடே தென்னிலங்கை அரசியலில் பெரும் சூடுபிடிக்கும் அம்சமாக அமையக் கூடும். எனவே இச்சர்ச்சைக்குரிய இப் பிரச்சினைக்குப் பின்னால் வேறு ஏதாவது சக்திகளின் கரங்கள் மறைந்துள்ளனவோ என்ற சந்தேகம் எழுகின்றது. அன்று தென்னிந்தியாவிலிருந்து மகாயானம் வந்த போது தமிழின எதிர்ப்பு மகா வம்சம் உருவாகியது. இன்று ஜப்பானிலிருந்து சிங்கள பிக்கு இலங்கைக்கு மகாயானத்தை கொண்டு வரும் போது என்ன வம்சம் உருவாகுமோ?

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

இப்பொருட்கள் நல்ல நிலையில் உள்ளனவா என அடிக்கடி பரிசீலிக்க வேண்டும். இதனுள் இருக்கும் சமயங்களில் கண்டபடி கதைத்து, அசைந்து திரிவதால் அதிகளவு சக்தி இழப்பு ஏற்படும். எனவே ஓரிடத்தில் இருப்பதோ அன்றி படுப்பதோதான் சிறந்ததாகும்.

மேற்கூறப்பட்ட வகையிலான உறுதியான வீடுகளோ அல்லது அருகில் வேறு கட்டிடங்களோ கிடையாவிடின் உங்களது சூழலில் உள்ள அமைப்புகள் சிலவற்றைக் குண்டுவெடிப்பின் போது ஏற்படும் சிறு துண்டுகளுக்கெதிரான பாதுகாப்புள்ளதாக எவ்வகையில் மாற்றலாம் எனக் கவனிப்போம்.

இதன்போது மரவாலைகள் முதலியவற்றில் மரம் அரிவதற்காக வெட்டப்பட்டிருக்கும் கிடங்குகள் பயன்படுத்தக் கூடியனவாகும். நீங்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான பகுதியை விடுத்து ஏனைய பகுதியை சில பலகைகளினாலோ, மண்சாக்குகளினாலோ, தகரங்களினாலோ மூடி, குண்டுவீச்சு நிகழும் போது அதனுள் சென்றிருப்பது பாதுகாப்பானதாகும். உங்கள் சூழலில் உள்ள ஒரு சில கோயிற் கேணிகள் பாவிக்கப்படாத நிலையில் செடி, கொடிகள் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்குமாயின் அவற்றினைக்கூட நீங்கள் மேல் பகுதியை மூடிவிட்டு பயன்படுத்தலாம். அவ்வகையான கேணிகள் அகலம் கூடியவையாய் இருப்பின் இது சிறிது கடினமான செயலாகவே இருக்கும். பாதை ஓரங்களில் நீர் வடிந்து செல்வதற்காக வெட்டப்பட்டிருக்கும் வடிகால்கள் போன்றவற்றைக்கூட சற்று ஆழமாக்கிக் குண்டு வீச்சுக்களிற்கு எதிரான அகழிகளாக மாற்றலாம். இவற்றைப்போல் தூர்ந்த கிணறுகள், மதகுகளின கீழ்ப் பகுதிகள், பெரிய கான்கள் போன்றவற்றைக்கூட உங்களைக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து பெருமளவு பாதுகாக்கும். சில வேளைகளில் மேற்பகுதி மூடக்கூடிய வசதி இல்லா

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கு அரபு நாடுகளின் ஆதரவு மட்டுமல்ல மூன்றாவது உலக நாடுகளின் ஆதரவும் இருக்கிறது.

பாலஸ்தீனியர்களுக்கென ஒரு நாடு இப்பொழுது இல்லையென்றாலும்கூட பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடிவரும் யாசீர்அரபாத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் மூன்றாவது உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது உலக நாடுகளின் ஆதரவுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஐ.நா. கூட்டங்களில் தலைவர் யாசீர்அரபாத் கலந்துகொண்டு பாலஸ்தீனியர்களுக்கு இப்பிரதிநிதித்துவம் வகித்துக் குரல் கொடுக்கிறார்.

ஐ. நா. தலைமை நிலையம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் இருக்கிறது. 1988 ஆம் ஆண்டில் ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள யாசீர்அரபாத் அழைக்கப்பட்டபோது அவருக்கு விசா வழங்க அமெரிக்க ராஜாங்க இலாகா மறுத்துவிட்டது.

பாதுகாப்புச்சபை ஜெனிவாவிலுள்ள ஐ. நா. அலுவலகத்திற்கூடி யாசீர்அரபாத்தின் கருத்துக்களைக் கேட்டது. இதற்கு மூன்றாவது உலக நாடுகளே பெரிதும் காரணமாக இருந்தன.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பாலஸ்தீன மக்களுக்காகவும் பாலஸ்தீனவிடுதலை இயக்கத்துக்காகவும் குரல் கொடுக்கின்றன; ஆதரவு அளிக்கின்றன.

பாலஸ்தீனியர்கள் இழந்த தமது தாயகத்தை மீட்க வேண்டும்; மீண்டும் தமது சொந்த மண்ணில் குடியேறி வாழ வேண்டும் என்று இந்த நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் தமது நாடுகளில் வாழும் மக்கள் விஷயத்தில்

''ஊருக்கு உபதேசம்
உனக்கல்லடி கண்ணே''

என்ற முறையிலேயே நடந்து கொள்கின்றன.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி; அவர்களின் தாயகம்.

இலங்கை 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து ஆட்சிக்கு வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் விவசாய விஸ்தரிப்பு என்ற பெயரில் இன்றுவரை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் மண்ணை அபகரித்து வருகின்றன. தமிழ் மண்ணின் பெரும்பான்மையான பகுதிகள் சிங்கள மயமாக்கப்பட்டுவிட்டன.

பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட மண்ணைத் தமது ஆக்கிரமிப்புப் பிரதேசமாக வைத்துக்கொள்வதற்கு ஆயுதப்படைகளையும் கொண்டு வந்து குவித்து வைத்துள்ளன. தமிழ் மண்ணிலிருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டனர்; தமிழ் மக்கள் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணை மீட்பதற்கும் அடிமைத் தளை நீங்கி சுதந்திரமாக வாழவும் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள். இவர்கள் ''பயங்கரவாதிகள்'' என்று வர்ணிக்கப்பட்டு அவர்களுக்கெதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இதே கோரிக்கையை முன்வைத்து ஆயுதம் ஏந்திப் போராடும் யாசீர்அரபாத்துக்கு பாராட்டும் செங்கம்பள வரவேற்பும் ஆதரவும்.

இலங்கையில் தங்கள் மண்ணுக்காகவும் தங்கள் பாதுகாப்பு, சுதந்திரம் கௌரவத்துக்காகவும் போராடும் தமிழ்ப் போராளிகளை அழிப்பதற்கு இந்தியப்படையும்கூட முயன்றது.

பாலஸ்தீனியர்களின் போராட்டத்தை ஆதரிக்கும் இந்தியா தனது நாட்டில் காஷ்மீர் மக்களின் போராட்டம் பஞ்சாப் போராட்டம் என்ற சொந்த மக்களின் உரிமைப் போராட்டங்களை படைபலம் கொண்டு அடக்குகிறது.

''தாய்வீட்டில் பட்டினி - தம்பி
காசியில் கோதானம்''

என்பதுபோல்தான் இலங்கை இந்திய ஆட்சியாளர்களின் செயலிருக்கிறது. இது எத்தனை காலத்துக்கு நீடிக்கும்?

---

கொண்டார். தென்னிந்தியாவில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் இலங்கையில் பிரதிபலிக்கும் என உணர்ந்தார். குறிப்பாக தென்னிந்தியாவிலிருந்தே தேரவாத பௌத்தத்திற்கு ஆபத்து வருமென அஞ்சியதால், தென்னிந்தியாவிற்கு எதிரான எண்ணக் கருவைப் புகட்டும் ஐதீகத்தை எழுதலானார். அவ்வாறே அவரால் எழுதப்பட்ட நூலே ''மஹாவம்ச'' என்பதாகும். அந்நூலில் ஏகப்பட்ட வகையில் தமிழ் இன எதிர்ப்புணர்வு இருப்பதை நாம் காணலாம். இதுவே இற்றைவரையுள்ள தமிழ் - சிங்கள பகைமைக்கான விதையை விதைத்துள்ளது. எனவே மகாயான, தேரவாத பிரச்சனையே இலங்கையின் இனப் பிரச்சனைக்கு கால்கோள் அமைத்த அம்சமென நாம் கருதலாம்.

வண. வெல்பொல விபாச்சி தேரோ எனப்படும் சிங்கள பௌத்த பிக்கு ஒருவர் யப்பானில் மகாயான பௌத்தத்தை தழுவியமை, இலங்கை வாழ் தேரவாத பௌத்தர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இப்பிக்கு இலங்கையிலுள்ள ''ஷியாம் நிகாய'' கல்யாணி சமகிரி பீடத்தைச் சேர்ந்தவர். இவருடைய மதமாற்றத்தையும், இவருடைய வருகையால் ஏற்படக் கூடிய விழைவுகளையும் இலங்கையில் உள்ள சகல பௌத்த பீடாதிபதிகளும், முக்கிய அரசியல் தலைவர்களும் எதிர்க்கின்றனர். ரூபவாஹினி, றேடியோ, அரசு தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் இந்த மகாயான பிக்குவிற்கு எதிராக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. சென்ற 15 ஆம் திகதி ''த ஐலண்ட்'' பத்திரிகையில் விஜிய சோமாவால் வரையப்பட்ட ஒரு சீடர்களாகிய பௌத்த பிக்குகள் பலர் முதலாவது மகா சங்கத்தை கூட்டினார். அம் மகாநாட்டில் பௌத்த மதம் பற்றிய வரையறைகள் மேற்கொள்ளப்பட்டன. இது நிகழ்ந்து ஓர் நூற்றாண்டின் பின்பு வைசாலியில் கூடிய இரண்டாவது மகாநாட்டில் பிக்குகளிடையே ஏற்பட்ட கோட்பாட்டு வேறுபாடு காரணமாக தேரவாதம் என்றும் மகா சங்கிகர் என்றும் இரு பிரிவினர் தோன்றினர் கி மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் ஆதரவில் பாடலிபுரத்தில் நிகழ்ந்த மூன்றாவது மகாநாட்டில் தேரவாதம் அரசமதமாகியது. அதற் எதிரானவர்கள் மகா சங்கத்திலிருந்து விலக்கப்பட்டனர். பின்பு கி. பி. 1ஆம் 2 ஆம் நூற்றாண்டிற்கிடையே காஷ்மீர் என்னும் இடத்தில் கூடிய நான்காவது மகாநாட்டில் உருப்பெற்ற 'சருவாத்தி' வாதிகள் மத்தியிலிருந்து மகாயானம் முழு உருப்பெற்றது. மகா சங்கிகர் பிரிவினர் தொடக்கம் சருவாத்தி வாதிகள் வரை உள்ள காலப்பகுதி மகாயான கோட்பாடு உருப்பெற்ற காலமாகும். மகாயான பிரிவினரால் தேரவாதிகளும், அவர்கள் சார்ந்த பகுதியினரும் ''ஈனயான பிரிவினர்'' என அழைக்கப்பட்டனர். மகாயானம் என்பது நிர்வாணம் அடைவதற்கான பெரிய ஊர்திகள் அல்லது வாகனங்கள் என்பது பொருளாகும். ஈனயானம் என்பது கத்திலிருந்தும் அதற்கு அப்பால் இருந்தும் பெற்ற கருத்துக்களின் மூலம் கிறிஸ்தவ செல்வாக்கு மகாயானத்தில் காணப்படுகின்றது. இந்த வகையில் மகாயானம் என்பது இந்து மதத்தை நோக்கிய, பௌத்தத்தில்எழுந்தஓர்சீர்திருத்தம்எனசொல்லப்படுவதும் உண்டு எது எவ்வாறாயினும் இந்தியாவில் தேரவாதமும் மகாயானமும் இந்து மதஎழுச்சியினால்பெருமளவு அடியுண்டன. இறுதியாக இஸ்லாமிய படையெடுப்பின், மூலம் மிஞ்சியிருந்த மகாயான, வச்சிரயான பிரிவினரும் அடியுண்டு போயினர். குறிப்பாக இஸ்லாமிய படையெடுப்பின் மூலம் நாலாந்தா பல்கலைக்கழக நூலகமும், ஏனைய நூலகங்களும், தீக்கிரையாக்கப் பட்டன. பௌத்த பிக்குகளும் வாளுக்கு இரையாகினர். நாலாந்தா பல்கலைக்கழக பிராந்தியத்தில் வாழ்ந்த எஞ்சிய பிக்குகள் நேபாளத்திற்கும், தீபெத்திற்கும் தப்பியோடினர். இந்த வகையில் இந்தியாவில் தோன்றிய பௌத்தம் இந்தியாவில் வாழ முடியாது போனது. ஆயினும் பௌத்தம் அதன் மூலத் தன்மையுடன், இலங்கையில் தான் பேணப்படுவதாக இலங்கையிலுள்ள தேரவாத பௌத்தர்கள் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இலங்கையிலுள்ள பௌத்தம் தேரவாதமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. மகாயானத்திற்கு மாறியுள்ள பௌத்த பிக்கு இலங்கையி

---

பலகைகளினாலோ, மண்சாக்குகளினாலோ, தகரங்களினாலோ மூடி, குண்டுவீச்சு நிகழும் போது அதனுள் சென்றிருப்பது பாதுகாப்பானதாகும். உங்கள் சூழலில் உள்ள ஒரு சில கோயிற் கேணிகள் பாவிக்கப்படாத நிலையில் செடி, கொடிகள் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்குமாயின் அவற்றினைக்கூட நீங்கள் மேல் பகுதியை மூடிவிட்டு பயன்படுத்தலாம். அவ்வகையான கேணிகள் அகலம் கூடியவையாய் இருப்பின் இது சிறிது கடினமான செயலாகவே இருக்கும். பாதை ஓரங்களில் நீர் வடிந்து செல்வதற்காக வெட்டப்பட்டிருக்கும் வடிகால்கள் போன்றவற்றைக்கூட சற்று ஆழமாக்கிக் குண்டு வீச்சுக்களிற்கு எதிரான அகழிகளாக மாற்றலாம். இவற்றைப்போல் தூர்ந்த கிணறுகள், மதகுகளின கீழ்ப் பகுதிகள், பெரிய கான்கள் போன்றவற்றைக்கூட உங்களைக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து பெருமளவு பாதுகாக்கும். சில வேளைகளில் மேற்பகுதி மூடக்கூடிய வசதி இல்லாவிடில், அவ்வாறான கிடங்குகளை பாதுகாப்பற்றது எனக் கருதி ஒதுக்கிவிட வேண்டாம். அவைகள் நேரடியாகவோ அல்லது ஒரு சில அடிகள் அண்மையிலோ விழுந்து வெடிக்கும் குண்டுகளுக்கு மட்டுமே பாதுகாப்பற்றனவாகும். அவ்வகையான சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவானதாகும். மின்னலின்போது ஏற்படும் இடியானது ஒவ்வொன்றும் எமது தலைகளின் மீதே விழுந்துவிடும் என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமானதோ அதைப் போன்றதே போடப்படும் குண்டுகளும் நேரடியாக எம்மீது விழுந்து வெடிக்கும் என எண்ணுதலுமாகும். எனவே குண்டு வீச்சுக்களிற்கு எதிரான வகையில் பிரத்தியேகமான அகழிகள் அமைப்பதற்கு இயலாதவர்கள் இயலுமானவரை மேற்கூறியவாறோ அல்லது வேறு வகையிலான ஏதாவதொரு பள்ளமோ, கிடங்கோ உங்கள் அருகில் காணப்படுமாயின் அவற்றினைக் குண்டு வீச்சிற்கெதிரான காப்பாகப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

இனி நாம் குண்டு வீச்சிற்கெதிராக விசேடமாக அமைக்கப்படும் அமைப்புக்களைக் கவனிப்போம். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் நேரடியாக குண்டு மேலே விழுவதற்குப் பாதுகாப்பான அமைப்புகளைக் கட்டுவது என்பது பொருளாதார ரீதியில் ஒவ்வொருவருக்கும் சாத்தியமானதல்ல. இருப்பினும் நேரடியான தாக்குதலுக்கெதிரான ஒரு சில அமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

பொதுவாக இம்மாதிரியான அமைப்புகள் நிலத்தின் கீழ் அகழிகள் வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. ஏனெனில் நிலத்தின் மேல் அமைக்கப்படும் அமைப்புகளாயின் பக்கவாடுகளும்கூட குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கும் முகமாகவே கட்டப்பட வேண்டும். இது மேலும் அதிகளவு பொருட்செலவை தரும் என்பதால் நிலங்கீழ் அமைப்புகளே விரும்பப்படுகின்றன. இதன்போது பக்கவாடுகள் அனைத்தும் மண்ணினால் பாதுகாப்பாக சூழப்பட்டிருப்பதால் மேல் பகுதிக்கு மட்டும் தாக்குதலை எதிர்கொள்ளக் கூடிய வகையில் கூரை அமைக்கப்படுதலே போதுமானதாகும். உதாரணமாக 550 இறாத்தல் எடையுடைய உயர் வெடிமருந்தைக் கொண்ட வெடிகுண்டொன்றின் நேரடியான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டுமாயின் கூரையானது 9. 1/2 அடி உயரமுடைய வலுவாக்கப்பட்ட கொங்கிறீற்றினால் (Reinforced Concrete) ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது 3 அடி வலுவாக்கப்பட்ட கொங்கிறீற்றும், 15 அடி உயரத்திற்கு மண்ணும் இருப்பினும்கூட அதே வகையான பாதுகாப்புக் கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

மேற்கூறப்பட்ட விஷேட அமைப்புகளைவிட மக்கள் அனைவராலும் அமைக்கக்கூடிய அகழிகள் இரு வகைப்படுகின்றன. திறந்த அகழிகள், மூடிய அகழிகள் என்பவையே அவையாகும். இங்கு ஒப்பீட்டு ரீதியில் பார்க்குமிடத்து மூடிய அகழிகளானவை திறந்த அகழிகளைவிட அதிகளவு பாதுகாப்பைத் தரக்கூடியனவாகும். ஆனாலும் திறந்த அகழிகளில் உள்ள நன்மையாதெனின், குறுகிய அவகாசத்தினுள் அதிகமானோர் அதனுள் உடனடியாக மறைந்து கொள்ளக் கூடியதாக இருப்பதேயாகும்.

(தொடரும்)

---

# உறுப்பினர்உயிர்துடிப்புடன் செயற்பட வேண்டும்

(தீவுப்பகுதி)

சிற்றூரவையில்அங்கம்வகிக்கும் உறுப்பினர்கள் உயிர்த்துடிப்புடன் செயல்பட வேண்டும். எமது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தேர்தலுக்காக அமைக்கப்பட்ட ஓர் கட்சியல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும். சிற்றூரவை தான் சகல மக்களையும் ஒன்று திரட்டிச் செயல்பட வைக்கவேண்டும். மக்கள்ஒன்று திரண்டு எமது விடுதலையை முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும் தீவுப்பகுதியானது யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளையும்விட சகலதுறைகளிலும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்தப் பிரதேசத்தை முன்னணிக்குக்கொண்டு வர நாம் பாடுபட வேண்டும். இதற்குஉங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

மேற்கண்டவாறு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற சிற்றூரவை நிர்வாக உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி அரசியற் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோ குறிப்பிட்டார்.

(15)

---

# பற்றுச் சீட்டுக்கு 1 ரூபா, முத்திரை போதுமா?

## மக்கள் மடல்

ஆசிரியர்
ஈழநாதம்,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உப அலுவலகத்தில் வரிக்கட்டணம், மின்சாரக்கட்டணம் என்பவற்றை மக்கள் கட்டும் பொழுது அதற்கு நிர்வாகிகள் வழங்கும் பற்றுச் சீட்டுக்கு ஒரு ரூபா முத்திரை ஒட்டி கையொப்பம் இட்டு வழங்குகின்றனர் ஆனால் தற்போதைய அரசாங்க சட்டத்தின் படி 100/- ரூபாவுக்கு மேற்பட்ட எந்தவொரு பண விடயத்திற்கும் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட வேண்டும் அப்படி இல்லையாயின் அதுசெல்லுபடியாகாது இந்த நிலையில் பச்சிலைப்பள்ளி பகுதி மக்களுக்கு பிரதேச சபை வழங்கும் பற்றுச்சீட்டு பெறுமதி அற்றதா அல்லது மக்களுக்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டுத்தான் என்ற அக்கறையீனமா என்பது புரியவில்லை.

மதிவாணன்
பச்சிலைப்பள்ளி

Registered as a News Paper at the G. P. O

# ஈழநாதம்

# ஊழியர் சேமலாப நிதி வட்டிக் குறைப்புக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கான வட்டியை 13 வீதத்திலிருந்து 11 வீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை எதிர்த்து தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மத்திய வங்கியில் வைப்பிலிருக்கும் ஊழியர் சேமலாப நிதியின் பெறுமானம் தொடர்ச்சியாகக் குறைந்து வரும் காலகட்டத்தில், பணவீக்கத்தைக் காரணம் காட்டி வட்டி வீதத்தைக் குறைக்கும் அரசாங்கத்தின் செயல் நீதிக்குப் புறம்பானது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது,

ஊழியர்கள் தமது பெயரில் வைப்பிலிருக்கும் சேமலாப நிதியைப் பிணையாகக் கொடுத்து, அதற்குப் பதிலாக வங்கிகளில் எடுக்கும் கடனுக்கு 22 வீதம் வட்டியாக வசூலிக்கப்படுகிறது. ஆகவே, சேமலாப நிதி மீதான வட்டி வீதத்தைக்குறைப்பது அடாத செயலென்று கூட்டுறவு, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர் சங்கம் தொழில் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது,

வழமையாக வட்டி வீதத்தை மீளவும் வழங்கும்படி தொழிற்சங்கம் தமது கடிதத்தில் தொழில் அமைச்சரைக் கேட்டுள்ளது.

இதேவேளை பல கூட்டுத்தாபனங்களும், தனியார் நிறுவனங்களும் ஊழியர் சேமலாபநிதியைக் கட்டாமல் நிலுவை வைத்திருப்பதால் அந்த நிறுவனங்கள் மீது தொழில் அமைச்சு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. கூட்டுத்தாபனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள், தனியார்துறை ஆகியவற்றிலிருந்து ஊழியர் சேபலாபநிதி ரூபா 4 கோடி நிலுவையுள்ளதாம்.

சமீபத்தில் கலைக்கப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையிடமிருந்து ரூபா 50 லட்சம் ஊழியர் சேமலாப நிதியாக வரவேண்டியுள்ளதென்றும், அதை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளைத் தமது திணைக்களம் மேற்கொண்டு வருவதாக தொழில் ஆணையாளர் பி. வீரக்கோன் தெரிவித்தார்.

## மா இறக்குமதி விரைவில் நிறுத்தப்படும் -உணவு அமைச்சர்

(கொழும்பு)

கோதுமை மா இறக்குமதி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, பாணை உணவாகக் கொள்ளும் வழக்கம் வெகு விரைவில் கைவிடப்பட உள்ளது, இவ்வாறு உணவமைச்சர் மல்லிமாராச்சி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், உள்ளூர் உணவு வகைகளான கௌபி, பயறு போன்றவைகள் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மா இறக்குமதி படிப்படியாகக் குறைக்கப்படும் என்றார்.

அவர் தொடர்ந்து கூறிய [illegible] 1505-ல் போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாண் உணவு நிறுத்தப்படும். சராசரி மாதமொன்றுக்கு ஒரு மனிதன் 35 கிலோ கிறாம் மாவை உட்கொள்கிறான். பாணுக்குப் பதிலாக உள்ளூர் தயாரிப்பான உணவுப் பண்டங்களை நுகரும் திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

காலையில் தொழிலுக்குச் செல்லும் ஊழியர்களின் வசதிக்காக சிறிய அளவிலான உணவுப் பொட்டலங்கள் விற்பனைக்கு வரவுள்ளன என்றும், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் உற்பத்திப் பண்டங்களைப் பெருமளவில் வாங்கிசந்தைப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படும் என்றார்.

### உல்லாசப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி கடந்தகால சம்பவங்களினால் பாதிப்பு அடைந்துள்ள உல்லாசப் பயண விடுதிகளின் சொந்தக்காரர்கள் பாதிக்கப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் தேவைப்படும் கடன் தொகை குறித்து மத்திய புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொள்ளலாம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களின் விளைவாக ஐம்பதுக்கும் மேற்பட்ட உல்லாசப் பயண ஹோட்டல்கள் பாதிப்பிற்குள்ளாகின. இதற்கான

### மக்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் கடைகள் அடைக்கட்டிருந்தன.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலிருந்து வந்த

## உள்ளூராட்சி தேர்தலுக்கு தேர்தல் திணைக்களம் ஆயத்தம்

(மட்டக்களப்பு)

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இவ் வருடம் நடைபெறவிருப்பதை அடுத்து தேர்தல் திணைக்களம் அதற்கான ஆயத்தங்களை தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் தேர்தலில் கடமையாற்றும் ஊழியர்கள் போக்குவரத்துக்கு தேவையான வாகனங்கள் போன்ற விபரங்களை தற்போது திரட்டி வருகின்றது.

அரச ஊழியர்கள் சகலரும் தேர்தல் கடமைகளில் ஈடுபடல் வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் விலக்கு அளிக்கப்பட்டாலன்றி எக் காரணம் கொண்டும் கடமையில் பின்நிற்க முடியாது எனவும் பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள நிர்வாக சுற்றறிக்கை 20/90 தெரிவித்துள்ளது.

இத் தேர்தல் கடமைகளில் ஆசிரியர்களின் சேவையும் பெறப்படவுள்ளது. வாக்கெடுப்பு கடமைகளில் போன்று இம்முறை வாக்கு எண்ணும் கடமைகளிலும் பெண்கள் ஈடுபடுத்தப்படவிருப்பதால் சகல பெண் ஊழியர்களின் விபரங்களும் கோரப்பட்டுள்ளது.

### புலிகளுடன் . . .

( ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதால் வடக்கிலும்கிழக்கிலும் சமாதானத்தையும்,சாந்தியையும் நிலை நாட்ட முடியாது மாறாக அப்பாவிகளான தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் ஆயிரக் கணக்கில் செத்து மடிவார்கள் என்றும், மாண்புமிகு ஜனாதிபதியின் முயற்சியால் சமீப காலங்களில் கட்டி வளர்க்கப்படும் பொருளாதாரம் குலைந்து விடும் என்று ஹிஸ்புல்லா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## எமது மக்களுக்காக தீவிரமாக உழைத்த வண. லோங் அடிகள்

(விசேட நிருபர்)

''யாழ்-பொதுநூலகத்தை எமது மக்களின் கல்வி வளர்ச்சிக்காக கட்டி எழுப்பியது மட்டுமல்ல ஆங்கிலேயரால் இராணுவ விமான நிலையமாகப் பாவிக்கப்பட்ட பலாலி விமான நிலையத்தை பொது மக்களின் பாவனைக்கு பெற்றுக் கொடுப்பதிலும் தீவிரமாக உழைத்து வென்றவர். வண. லோங் அடிகள்.''

நேற்று (22-5-90) காலை 9.00 மணிக்கு யாழ்-சம்பத்திரிசியார் கல்லூரி மதுரம் திட

யாழ்-ஆயர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத் தமிழ் மகனாக வாழ்ந்த பெருமகனார் வண. லோங் அடிகள் அயர்லாந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அத்தகைய ஒரு செயல் வீரனுக்கு இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டுக் கௌரவிப்பதானது வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமான விடயம் இவ்வாறு அவர் கூறினார்.

தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் பேசியதாவது

டாக்டர் ஜே, பி. சி. பிலிப்ஸ் பேசுகையில் எம்முடன் வாழ்ந்து மறைந்தும் எம்முடன் நீங்காத நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர் வண. லோங் அடிகள் என்றார்,

யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட். மன்னார் அரச அதிபர் செபநாயகம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

அடுத்து 'அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்' என்னும் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் திரு. ஞானரெட்ணம்

## 47 பேருக்கு சேவை நலம் பாராட்டி கௌரவப் பட்டங்கள்

பல் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய 47 இலங்கையர்களுக்கு அவர்களது சேவையைக் கௌரவிக்கு முகமாகவே தேசிய வீரர் தினத்தை முன்னிட்டுநேற்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கௌரவப் பட்டங்களை அளித்து கௌரவித்தார்.

11 தமிழ் முஸ்லிம் பிரமுகர்களும் இதில் அடங்குவர். முன்னாள் கல்வி அமைச்சரும். சுகாதார அமைச்சருமான பதியுதீன் முஹமத், திறைசேரிச் செயலாளரும் தேசிய அபிவிருத்தி வங்கித் தலைவருமான பி. மகாதேவாவுக்கு அதியுயர் பட்டமான தேமான்ய பட்டம் வழங்கப்பட்டது.

தேசமான்ய பட்டம் ஐவருக்கு வழங்கப் பட்டது. அத்துடன் பரதநாட்டியத் தாரகை செல்வி வாசுகி சண்முகம்பிள்ளைக்கு ''கலாசூரி'' முதல்தர பட்டம் வழங்கப்பட்டது.

### ஒட்டுசுட்டான்

## மின்சார விநியோகத்திற்கு 50,000 ரூபா ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

ஒட்டு சுட்டான் உதவி அரசாங்க அதிபரின் தற்போதைய தற்காலிக உள்ளூராட்சிக் கட்டிடத்திற்கு மின்சார வேலைக்கென 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்க அதிபர் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒட்டு சுட்டானில் புதிய நிரந்தர உதவி அரசாங்க அதிபர் காரியாலய கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது.

(58)

## பட்டதாரிகள் விசேட துணை பயிற்சியாளர்களாகத் தெரிவு

(வவுனியா)

மாகாண அரசின் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ், பட்டதாரிப் பயிற்சியாளர்களாக நியமனம்பெற்றவர்களில், வடக்குகிழக்குமாகாண அரசின் காணி அமைச்சின் கீழ் கடமைபுரிய முதலாவது இரண்டாவது தொகுதியினர் விசேட துறைப்பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதலாவது தொகுதியில் இருந்து 5 பேரும், இரண்டாவது தொகுதியினரிலிருந்து 31 பேரும் மேற்படி பயிற்சியாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலும். பயிற்சி பெற்று வருகின்றனர்

இவர்கள் நிர்வாக, ஸ்தாபன, கணக்கியல், ஆராய்ச்சி, விவசாயம், விவசாய விரிவாக்கம், விவசாய வேலைகள் முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பயிற்சிபெற்று வருகின்றனர்.

இப்பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சிக் கொடுப்பனவுகளை இளைஞர் விவகார மனிதவள திட்டமிடல் அமைச்சேவழங்கி வருகிறது என்று அறியப்படுகிறது. (தி

உயர்தர வகுப்பு மாணவருக்கு நல்வாய்ப்பு!

சத்தீஸ் மாஸ்ரரின்

A/L இரசாயனம்

இது ...
பட்டுள்ள சுற்றறிக்கையின் படி கடந்தகால சம்பவங்களினால் பாதிப்பு அடைந்துள்ள உல்லாசப் பயண விடுதிகளின் சொந்தக்காரர்கள் பாதிக்கப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் தேவைப்படும் கடன் தொகை குறித்து மத்திய புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொள்ளலாம்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற வன்செயல் சம்பவங்களின் விளைவாக ஐம்பதுக்கும் மேற்பட்ட உல்லாசப் பயண ஹோட்டல்கள் பாதிப்பிற்குள்ளாகின. இதற்கான காப்புறுதி நட்ட ஈட்டினைக் கூட பலர் இதுவரை பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சான்றிதழ்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில சந்தர்ப்பங்களில் குடும்பத் தலைவனுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடும்ப அங்கத்தினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை திணைக்களம் ஏற்படுத்தி வரும் இப்படியான குளறுபடியால் குடும்பத்தில் ஒருசிலருக்கு சான்றிதழ்கிடைத்தும் வேறு பலருக்குகிடைக்காமலும் இருக்கின்றது.

## ஆங்கில

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களை யூன் முதலாம் திகதிக்கு முன்னதாக இல, 5, காலி வீதி, கொழும்பு 6 இல் உள்ள தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் தொழிற்பயிற்சிப் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். (மு

அறிமுகப்படுத்தப்படும்.

காலையில் தொழிலுக்குச் செல்லும் ஊழியர்களின் வசதிக்காக சிறிய அளவிலான உணவுப் பொட்டலங்கள் விற்பனைக்கு வரவுள்ளன என்றும், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் உற்பத்திப் பண்டங்களைப் பெருமளவில் வாங்கிசந்தைப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படும் என்றார்.

## மக்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் கடைகள் அடைக்கட்டிருந்தன.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலிருந்து வந்த கசப்புணர்வுகளை நீக்கி இரு சமூகத்தினருக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றியவர் ஆதம் பாவா என்றும் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்றும் திரு. கரிகாலன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் இணைப்புப் பாலமாக ஆதம் பாவா இருந்தார் என்று திரு. காஸ்ரோ தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

பறக்த் இளையதம்பி என அழைக்கப்படும் ஆதம் பாவாவின் இழப்புக் குறித்து அம்பாறை மாவட்ட உழைக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் எ. அருட்பிரகாஷ் தமது அறிக்கையில் திரு. ஆதம்பாவா தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒரு பாலமாக திகழ்ந்தவர். அத்துடன் இவர் அம்பாறை மாவட்டத் தொழிலாளர்களின் தோழர் என்றும் குறிப்பிட்டார். ஆதம்பாவாவுக்கு 45 வயது ஐந்து குழந்தைகளின் தந்தையுமாவார்.

(48, 37)

# உழைத்த வண. லோங் அடிகள்

(விசேட நிருபர்)

''யாழ்-பொதுநூலகத்தை எமது மக்களின் கல்வி வளர்ச்சிக்காக கட்டி எழுப்பியது மட்டுமல்ல ஆங்கிலேயரால் இராணுவ விமான நிலையமாகப் பாவிக்கப்பட்ட பலாலி விமான நிலையத்தை பொது மக்களின் பாவனைக்கு பெற்றுக் கொடுப்பதிலும் தீவிரமாக உழைத்து வென்றவர். வண. லோங் அடிகள்.''

நேற்று (22-5-90) காலை 9-00 மணிக்கு யாழ்-சம்பத்திரிசியார் கல்லூரி மதுரம் திடலில் நடைபெற்ற வண. லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய யாழ்-ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவம் பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு பிரான்சிஸ் யோசெப் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் முதல் முத்திரையை யாழ். ஆயருக்கு வழங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்-ஆயர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத் தமிழ் மகனாக வாழ்ந்த பெருமகனார் வண. லோங் அடிகள் அயர்லாந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அத்தகைய ஒரு செயல் வீரனுக்கு இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டுக் கௌரவிப்பதானது வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமான விடயம் இவ்வாறு அவர் கூறினார்.

தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் பேசியதாவது தேசிய வீரர் வரிசையில் இலங்கை அரசால் கௌரவிக்கப் பட்டிருக்கும் வண. லோங் அடிகள் ஒரு சர்வதேச வீரர் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்காது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புற நானூற்று பாடலுக்கமைய அயர்லாந்தில் பிறந்தவராக லோங் அடிகள் இருந்தபோதும் நமது நாட்டை தமது நாடாகக் கருதி எமது மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக் அவரது சேவைக் காலத்தில் கடமை ஆற்றியதை நாம் மறந்துவிட முடியாது என்றார்.

டாக்டர் ஜே, பி. சி. பிலிப்ஸ் பேசுகையில் எம்முடன் வாழ்ந்து மறைந்தும் எம்முடன் நீங்காத நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர் வண. லோங் அடிகள் என்றார்,

யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட். மன்னார் அரச அதிபர் செபநாயகம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

அடுத்து 'அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்' என்னும் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் திரு. ஞானரெட்னம் யாழ்-ஆயருக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

இறுதியாக வில்லுப்பாட்டு நாடகம் என்பனவும் நடைபெற்றன. தமிழ் வளர்க்கப் பாடுபட்ட ஐரோப்பியப் பெரியாரின் முத்திரை வெளியீட்டு வைபவம் முற்று முழுதாக ஆங்கில மயமாக விளங்கியமை விசனிக்கத்தக்கதாக அமைந்தது. (21)

## ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தபால் திணைக்கள ஊழியர்களுக்கு 3 மாத ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி 3 மாதம் ஊக்குவிப்பு அலன்ஸ் விரைவில் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (37

## அரசின் போக்கால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சர்வகட்சி மாநாடு புலிகள் பகிஷ்கரிப்பு

சர்வகட்சி மாநாட்டில்பங்கு பற்றிவரும் தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் தமிழ் பேசும் மக்களால் ஒதுக்கப் பட்டவர்கள்என்றும் தமிழரின் தேசியஇனப்பிரச்சினைபற்றிப் பேசுவதற்கு இக்குழுக்களுக்கு எந்தவித அந்தஸ்தும் அருகதையும் இல்லையென்றும், இம் மாநாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து பகிஷ்கரிக்கும் என்றும் புலிகள் தரப்பில் எடுத்துரைக்கப் பட்டது.

### இராணுவ முகாம்கள் குண்டுவீச்சு விமானம்

சிங்கள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுவது, குண்டுவீச்சு விமானங்கள் வேவுபார்ப்பது போன்ற யுக்த முஸ்தீபுகள் மக்கள் மத்தியில் கிலியை ஏற்படுத்தியிருப்பதாக புலிகள் முறையிட்டனர். அதனை மறுத்த அமைச்சர் துருப்புகள் ஆகாய மார்க்கமாக இடமாற்றம் செய்யப்படுவதாகக் கூறினார் இந்த விளக்கம் விடுதலைப் புலிகளுக்கு திருப்தி அளிக்கவில்லையெனத் தெரிகிறது. இதுபற்றி இராணுவ தலைமைப்பீடத்திடம் விசாரித்துப் பார்க்குமாறு அமைச்சரிடம் கோரப்பட்டதாகத் தெரிய வருகிறது.

திருக்கோணமலையில் 60க்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் இயங்கி வருவதால் மக்கள் தினமும் அச்சத்தில் வாழவேண்டிய பயங்கர சூழ்நிலை அங்கு நிலவுவதாகவும், இம்முகாம்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென புலிகள்வற்புறுத்தினர்.

### மலையகத் தமிழர் பிரஜாவுரிமை

மலையகம் வாழ் தமிழ் மக்கள் கட்டாயமாக நாடு கடத்தப்படுவதை விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து எதிர்க்குமென்றும், அம்மக்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் புலிகள் கூறினர்.

வட-கிழக்கு பாதுகாப்பு பிரச்சனைகள் பற்றியும் இப் பேச்சுக்களில் விவாதிககப்பட்டது. புலிகள் எழுப்பிய பிரச்சனைகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசிவிட்டு மீண்டும் அடுத்தவாரம் அமைச்சர் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

## பட்டதாரி---..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்படுவர். இதற்கான நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படுமெனவும்தெரியவருகிறது.

## எல்லைப்புற

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பொறுப்பாளர் ரூபன் முன்னணியின் முக்கியஸ்தர் கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன், விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவைச்சேர்ந்த வசந்தன் ஆகியோர் மேற்படி கிராம மக்களினால் அன்போடு வரவேற்று உபசரிக்கப் பட்டனர்.

தமது கிராமம் எப்போதும் புலிகள் கிராமம் என்று அடைமொழிப் பெயரிடப்பட்டு ஸ்ரீலங்கா படைகளால் தாக்கப் பட்டு வந்திருப்பதாகவும், உண்மையிலேயே இம்மக்கள் தனி ஈழக் கொள்கையை ஆதரித்து வந்திருப்பதாகவும், எதிர் காலத்திலும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் எடுக்கப் போகும் சகல நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவு வழங்கப்போவதாகவும் அவர்கள் ஒரே குரலில் எடுத்துக் கூறினர்.

## இரத்தினக்கல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைக் களவாகக் கடத்திக் கொண்டு வர முயன்ற போது சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

31 பேரும் மேற்படி பயிற்சியாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

திட்டமிடல் அமைச்சேவழங்கி வருகிறது என்று அறியப்படுகிறது. (தி


O/L Dec. 90

பகல் முழுநேர வகுப்புகள்

காலை 8.00 - பி. ப. 1.00

முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்

ஆறுமாதகால துரிதமீட்டல் வகுப்பு

ஆரம்பமாகி நடைபெறுகிறது

எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை, கோப்பாய்

(B-962)

உயர்தர வகுப்பு மாணவருக்கு நல்வாய்ப்பு!

சத்தீஸ் மாஸ்ரரின்

A/L இரசாயனம்

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்

'ஈழநாதம்'

பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும்

சனிக்கிழமைகளில்

அசேதன இரசாயனம்

S. P. D. தொகுப்பு மூலகங்கள்

ஞாயிறு

பௌதிக இரசாயனம்

வெப்ப இரசாயனம்

உங்கள் பிரதிக்கு முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

நேற்று பிற்பகல் (22 - 05 - 90) நாயன்மார்கட்டு துர்க்கை அம்மன் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற மேற்படி சீட்டிழுப்பு முடிவுகள்:-

1வது பரிசு A 2019 2வது பரிசு B 7706

3வது பரிசு B 19749

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1) A 14380 | 4) B 5851 | 7) A 29860 |
| 2) A 24226 | 5) B 18738 | 8) B 10610 |
| 3) A 9379 | 6) A 16430 | 9) A 17587 |
| | 10) C 30528 | |

அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பரிசிற்குரிய டிக்கட்டுகளை பின்வரும் விலாசத்தில் சமர்ப்பித்துப் பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

EUROPE CHINA HOTEL
89, 2nd CROSS STREET
JAFFNA.

(R/301)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி. 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 23-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.